SRI LANKA MUSLIM CONGRESS
COLOMBO


# திசை
THISAI


உள்ளே....


- இந்தியாவும் இந்துசமுத்திரப் பிராந்தியமும்
- போராளிகளுக்குச் சிகிச்சை அளிக்கலாமா?
- கறுப்புமலர் நெல்சன் மண்டேலா
- மைக்டைஸன்: எதிரியைத்தாக்கும் முரட்டுக்காளை
- யாழ்ப்பாணச் சிறுவர் ஜேர்மனியில் அவஸ்தை
- 'தூண்டிலில்' சிக்கிய 'மல்லிகை!'
- சிறுகதை, கவிதைகள், விமர்சனக் கட்டுரை.


திசை 1 | 4-8-1989 வெள்ளிக்கிழமை | விலை : ரூபா 3-50 | முகம் 30

# பேச்சுவார்த்தை முறிந்தால் இலங்கை, லெபனுன் ஆகும்!

*தென்னிலங்கை ஜே.வி.பி யினரின் இடைவிடாத தாக்குதல்களுக்குள்ளும் கொலைகளுக்குள்ளும் ஒருபுறம் சிக்குண்டும் மறுபுறம் அரசபடைகளின் தேடுதல் வேட்டைகளுக்குள்ளும் முற்றுகைகளுக்குள்ளும் சிக்குண்டு இடர்படும் இவ்வேளையில், இவற்றுக்கெல்லாம் மூலகாரணிகளான இலங்கையின் இனப்பிரச்சினை, இந்தியப் படைவிலகல் சம்பந்தமாக டில்லியில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இலங்கை - இந்திய அரசுகளிடையிலான பேச்சுவார்த்தைகள், புதிய திருப்பத்தை அடைவதற்குரிய சாத்தியக்கூறுகள் தோன்றத் தொடங்கியுள்ளன.*

கடந்த நான்கு நாட்களாக தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கும் பேச்சுவார்த்தைகள் இணக்கமான முறையிலும் வெற்றிகரமாகவும் நடைபெற்றுக்கொண்டிருப்பதாக இருதரப்பு அரசு வட்டாரங்களாலும் அறிவிக்கப்பட்டிருந்தபோதும், ஒரு தீர்வுக்கு வரமுடியாத முட்டுக்கட்டை ஏற்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

யுத்த நிறுத்தம், படை விலகலுக்கான காலக்கெடு என்பவையே 'இழுபறி'க்குக் காரணமாய் உள்ளன. இன்னும் காலக்கெடு சம்பந்தமான முடிவு ஏற்படவில்லை என்றே தெரிகிறது.

ஆனுல் அமைச்சர்கள் மட்டத்தில் நடைபெற்றுக்கொண்டிருந்த பேச்சுவார்த்தை இடையில், இந்தியப் பிரதமரோடு கலந்தாலோசிக்கப்பட்ட பின்னர், முட்டுக்கட்டைகள் நீங்கி சில தீர்வுகள் முன்வைக்கப் படக்கூடிய நிலையை எய்தியுள்ளதாக இலங்கை வானெலி அறிவித்துள்ளது.

இதன்படி தீர்வுக்கு முன்வைக்சப்பட்டுள்ள யோசனைகளாவன:

உடனடி யுத்த நிறுத்தம், மாகாணசபைக்கான அதிகாரப் பரவலாக்கம் என்பவைக்கு உடன்படல். இந்த உடன்பாடு சகல தமிழ்ப் போராட்டக் குழுக்களையும் கூட்டி, பேச்சுவார்த்தை மேற்கொள்ள ஒழுங்கு செய்வதற்குரிய இணக்கமாகவும் அமையும்.

## பேச்சு வார்த்தை தோற்ருல்:

தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் பேச்சுவார்த்தை தோற்ருல், இலங்கை நிச்சயமாக ஒரு லெபனுன் ஆகும் நிலை ஏற்படலாம் என, அரசியல் அவதானிகள் அறிவிக்கின்றனர்.

ஒருபுறம் ஜே. வி. பியினரின் அட்டகாசம்; மறுபுறம் வட-கிழக்குப் பகுதிகளில் தமிழ்ப் போராட்டக் குழுக்களின் மோதல், இதற்கிடையில் இந்தியப்படையின் நடவடிக்கைகள் எதிர்க்கட்சிகளின் இணக்கமற்ற அரசுக்கெதிரான இழுபறிகள், ஆகிய சகலவற்றினதும் கூட்டுமொத்த விளைவுகள்

(12ஆம் பக்கம் பார்க்க)

# முதலாம் வகுப்பு அனுமதி; ஆசிரிய சங்கம் ஆலோசனை

அகில இலங்கை அரசாங்க ஆங்கில ஆசிரியர் சங்கம், விசேட தகைமை பெற்ற அரசாங்க பாடசாலைகளிலும், அவ்வாறல்லாத அரசாங்க பாடசாலைகளிலும் முதலாம் வகுப்பில் பிள்ளைகளைச் சேர்ப்பதற்குரிய சில விதிகளை, இது சம்பந்தமாக நியமிக்கப்பட்டுள்ள ஆய்வுக் குழுவுக்குக் கொடுக்கவுள்ளது. அவையாவன:

விசேட தகைமைபெற்ற அரசாங்க பாடசாலைகளில் 40% அப்பகுதியின் பிரதான குடியிருப்பாளரின் தூரத்தையும் 20% பிரதான குடியிருப்பாளர் அல்லாதோரையும், 10% பழையமாணவரின் பிள்ளைகளையும், 30% தற்போது கல்விபயிலும் பிள்ளைகளின்சகோதர சகோதரிகளின் வசிப்பிடத்தின் தூரத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கும்.

சாதாரண பாடசாலைகளில் 40% பாடசாலையில் அருகிலுள்ள பிரதான குடியிருப்பாளரின் பிள்ளைகள், 25% பிரதான குடியிருப்பாளர் அல்லாதோரின் பிள்ளைகள், 25% அப்பாடசாலையில் கல்விபயிலும் சகோதர சகோதரிகளின் இருப்பிடத்தூரத்தைக் கொண்டது. 10% பழைய மாணவரின் பிள்ளைகள்.

# கறுப்பு ஜூலை சிறையில் நினைவுகூர்வு

வெலிக்கடைப் படுகொலைகள் நிகழ்ந்த ஆருவது ஆண்டு தினத்தை (ஜூலை - 25,27) கொழும்பு புதிய மகஸின் சிறைச்சாலையிலுள்ள தமிழ் பேசும் அரசியல் கைதிகள் துக்கதினமாக அனுஷ்டித்தனர்.

அன்று முழுவதும் அவர்கள் பூரணமாக உண்ணுவிரதமிருந்து, கொலை செய்யப்பட்ட தமிழ் அரசியல் கைதிகளை நினைவு கூர்ந்து, தமது கண்ணீர் அஞ்சலிகளைச் செலுத்தினர்.

இவ்வாறு, ஒவ்வொரு வருடமும் இத்தினத்தில் உண்ணுவிரதமிருந்து கண்ணீர் அஞ்சலி செலுத்தப்பட்டு வருகின்றது என்பதும், குறிப்பிடத்தக்கது.

# அரசுக்கு மேலும் நெருக்கடிகள்

உலக நாடுகளுக்கு கடன் வழங்கும் ஸ்தாபனமான சர்வதேச நாணய நிதியம் (ஐ.எம்.எஃப்) இலங்கைக்குக்கடன் வழங்க முடியாதெனக் கைவிரித்துள்ளதால், இலங்கையரசு மேலும் புதிய நெருக்கடிக்குள்ளாகியுள்ளது.

அத்தியாவசியப் பொருட்களான மாவுக்கும் சீனிக்கும் 30 % விலையேற்றம் செய்யப்பட்வேண்டிய நிலையேற்பட்டுள்ளது.

நடைமுறைக்கு வரவிருந்த, ஜனுதிபதி பிரேமாவின் ஆசைக்குரிய செல்லத் திட்டமான ஜனசக்தித் திட்டம் ஆறுமாதங்களுக்குப் பின்போடப்பட்டுள்ளது.

இவற்ருல் ஜனுதிபதித் தேர்தலுக்கு கொடுத்த வாக்குறுதிகளைக் காப்பாற்ற முடியாத நிலைக்கு அவர் தள்ளப்பட்டுள்ளார். இக்காரணிகளால் அரசியல் லாபம் அடையப்போகும் ஒரேயொரு சக்தி, ஜே.வி.பி யே என்பது வெளிப்படை.

# அமைதிப் படை வெளியேறிஞல் ஜே. வி. பி. நிலை?

ஜே.வி.பி யினரின் இந்திய எதிர்ப்புவாதத்தைத் தமது போராட்டத்தின் மையமாகக் கொண்டுள்ளனர்.

இந்தியப்படையை இலங்கையிலிருந்து அகற்றி விட்டால் அப்போராட்டம் தணிந்துவிடுமென அரசு கருதுகிறது.

ஆனுல் இந்தியப்படை, வெளியேறிஞலும் ஜே.வி.பி யின் போராட்டம் தொடருமெனவே அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

வடக்கு—கிழக்கு இணைப்பையும், மாகாண சபையையும் ஜே.வி.பி யினர் தீவிரமாக எதிர்ப்பவர்கள் என்பதை, அதற்குக் காரணமாக அவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

# 'பக்ஸ் கிறிஸ்ரி' இயக்கத்தின் வேண்டுகோள்!

சர்வதேச கத்தோலிக்க சமாதான இயக்கத்தின் ('பக்ஸ் கிறிஸ்ரி') யாழ்ப்பாணக் கிளை வெளியிட்டுள்ள பிரசுரத்தில் கூறப்பட்டிருப்பதாவது:

நமது மண்ணில் கொலைகள் நாளாந்த நிகழ்வுகள் ஆகிவிட்டன. மனித உயிர்கள் பெறுமதியற்றதாகிக் கொண்டிருக்கும் இந்தவேளையில் நம் முன்னே வைக்கப்படும் கேள்வி, வாழ்வா இல்லை சாவா என்பதே. எல்லோரும் வாய்மூடி மௌனியாகி விட்டனர். இக்கொலைக்கு எதிராகக் குரல் கொடுப்போர்' எங்கே?

இச்சந்தர்ப்பத்தில் தென் அமெரிக்க அறவழி வீரர், எல்சல்வடோரின் பேராயர் ஒஸ்காறேமோறெவின், விடுதலை இயக்கங்களுக்கான செய்தியைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

''விடுதலை இயக்கங்களே, சிந்தனைப் பாதைக்குத் திரும்பி வாருங்கள். மனித மாண்பை மதியுங்கள் — கடத்துவதைத் தான், அச்சுறுத்தல் செய்வதைத்தான், பழிவாங்குவதைத் தான் நான் குறிப்பிடுகிறேன் ...... சகோதரர்களே நீங்கள் ஒவ்வொருவரும் நம்மவர்கள். நாம் ஒரே மக்கள். நீங்கள் கொல்லுபவர்கள் உங்கள் சகோதரனும் சகோதரியுமாவர். கொலைசெய்யும்படி மனிதவார்த்தைகள் சொல்லும். பதிலாக, கடவுளின் வார்த்தையை நினைவிற் கொள்ளுங்கள். கொலை செய்யாதிருப்பாயாக... கடவுளின் சட்டத்துக்கு மாருன எந்தக் கட்டளைக்கும் போராளிகள் அமையத் தேவையில்லை.''

---

**தவிர்க்கவியலாத காரணங்களால், 'திசை' யின் விலை அடுத்த இதழிலிருந்து 4/= ரூபாவாக்கப்பட்டுள்ளது. வாசகரதும் விற்பனையாளரதும் ஒத்துழைப்பைத் தொடர்ந்தும் எதிர்பார்க்கிறோம்.**

—நிர்வாகம்

---

திசை THISAI

ஆசிரியர்:
மு. பொன்னம்பலம்

சந்தா விபரங்கள்:
(உள்நாட்டுத் தபாற் கட்டணத்தையும், வெளிநாட்டுத் தபாற் கட்டணத்தையும் உள்ளடக்கியது.)

இலங்கை
ஒரு வருடம்—ரூபா: 200/-
அரைவருடம்—ரூபா: 100/

இந்தியா
ஒரு வருடம்—ரூபா: 300/-
(இந்திய ரூபா)

சிங்கப்பூர் / மலேசியா
ஒரு வருடம் – யு.எஸ்.டொலர் 40

ஏனைய நாடுகள்
ஒரு வருடம் – யு.எஸ்.டொலர் 60

காசோலைகள் அனைத்தும் நியூ ஈரா பப்ளிகேஷன்ஸ் லிமிட்டெட் (New Era Publications Ltd.) என்றே, எழுதப்பட வேண்டும்.

பத்திரிகை விநியோகம், சந்தாப்பணம், விளம்பரம் போன்ற நிர்வாகத் தொடர்பு முகவரி:

118, 4ஆம் குறுக்குத்தெரு,
த. பெ. 122,
யாழ்ப்பாணம்.


# முஸ்லிம் வித்தியாலயத்தின் 15 வருட அவலம்!

**ம**துரங்குளியூடாகச் சுமார் ஒருமைல் தூரத்தில் அமைந்திருக்கும் கடையாமோட்டை முஸ்லிம் வித்தியாலயத்தில் கடந்த 15 வருடங்களாக இருந்துவரும் குறைபாடுகள் தீர்க்கப்படாததால் அவலநிலை தொடர்கிறது.

இவ்வித்தியாலயத்தில் முதலாம் வகுப்புத் தொடக்கம் 10 ஆம் வகுப்பு வரைக்கும் 1500 மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். நான்கு பழைய கட்டிடங்கள் மட்டுமுள்ள இங்கு, முதலாம் இரண்டாம் வகுப்பு மாணவர்கள் கட்டிட வசதியில்லாததால், மரங்களின் நிழலில் தரையில் அமர்ந்தே கல்விபயில வேண்டியிருக்கிறது.

10ஆம் வகுப்பில் சித்தியடைந்த மாணவர்கள் தங்களின் கல்வியைத் தொடர்வதற்கு, அதிக செலவழித்து வேறுபாடசாலைகளுக்குச் சென்று படிக்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார்கள். வசதி குறைந்த மாணவர்கள் 10ஆம் வகுப்புடன் தமதுகல்வியை முடித்துக்கொள்ள வேண்டிய நிலையிலிருக்கிறார்கள்.

இவ்வித்தியாலயத்தில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகிறது; நிரந்தர அதிபர்கூட இல்லை.

மாணவர்கள் விளையாட்டுகளில் ஈடுபட வசதியான விளையாட்டு மைதானம் இல்லை; தண்ணீர் வசதி, மலசலகூட வசதியும் இல்லை. ஏற்கனவே பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டும் பயனேதும் ஏற்படவில்லை.

இனியாவது தமிழ்—முஸ்லிம் அமைச்சர்கள், கல்வித் திணைக்கள உயர் அதிகாரிகள், இந்த முஸ்லிம் வித்தியாலயம் பற்றி தக்க நடவடிக்கை எடுப்பார்களா?

எம்.ஐ.எம். பியாஸ்
மதுரங்குளி.



## இணைகள்

### மாசலின் அறிமுகத்துக்கு நன்றி

தங்களின் வெளியீடான திசை இதழ்களில் தொடர்ந்து வெளிவந்த கபிரியேல் மாசல் பற்றிய கட்டுரைகளைப் பார்வையிட்டேன். அந்த ஆய்வு நூலை எழுதிய ஆசிரியர் அருட்திரு டொமினிக் அ. ஜோசப் அடிகளார் தமிழ்ப்புத்திஜீவிகளின் மதிப்பை உயர்த்தி உள்ளார். தாங்கள் அதனைத் தமிழ்மட்டும் தெரிந்தவர்களுக்கும் அறிமுகப்படுத்தியதன் மூலம், அவர்களது நன்றிக்கும் பாத்திரமாகி விட்டீர்கள். தத்துவ விடயங்களைத் தமிழில் மொழிபெயர்த்துத் தருவதென்பது சாதாரணமான விடயமன்று. திரு. ஆ. சபாரட்ணம் அவர்களது மொழிபெயர்ப்பு கட்டுரைக்கு மேலும் மெருகூட்டுகின்றது.

மாசலின் சிந்தனையையும் இந்திய சமய தத்துவஞானத்தையும் ஒப்பிட்டு John. c. plott என்ற மேலைநாட்டவர் 'The Philosophy of Devotion, A Comparative Study of Bhakti and prapatti in Visistadvaita and St. Bonaventura and Gabrial Marcel' என்ற நூலை எழுதியுள்ளார். இதனை Motilal Banarsidas என்ற பிரபல இந்திய வெளியீட்டகம் பிரசுரித்துள்ளது என்பதைத், தங்கள் வாசகர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

ஏ.என். கிருஷ்ணவேணி
இந்து நாகரிகத் துறை
யாழ். பல்கலைக்கழகம்.

### பணியைத் தொடருங்கள்

தாங்கள் அனுப்பி வைத்த பத்திரிகைப் பிரதிகளுக்கு நன்றி.

நீங்கள் முக்கியமான ஒன்றைச் செய்துகொண்டிருப்பதாகவே நான் நினைக்கின்றேன். கலை, இலக்கியம், சினிமா, போன்றவற்றைப் பற்றி தங்களது விமர்சனங்கள் உண்மையாகவே அறிவூட்டுபவையாக உள்ளன. நீங்கள் இவ்வழியிலேயே தொடர்ந்து செல்வீர்கள் என எதிர்பார்க்கிறேன்.

அத்தோடு திரு. நா. தர்மலிங்கத்தின் கட்டுரையில் ('என்று தனியும் இந்தச் சுயநல மோகம்') பொதிந்துள்ள சமூக, கலாசார ரீதியான விமர்சனம் மிகவும் பாராட்டப்படவேண்டியதாகும். ரயிலில் 'கோணர் சீற்'றுக்காக தமிழர் முண்டியடிப்பதைக் கூறுவதன் மூலம், யாழ்ப்பாணத்தவர் சொத்துக்கள் மேல் கொண்டுள்ள அவாஞ்சையையும் அதன் மூலம் ஏற்படும் பிரிவினையையும், அக் கட்டுரை ஆசிரியர் அழகாகக் காட்டு கிறார்,

தயவு செய்து தங்கள் நல்ல பணியைத் தொடருங்கள்.

சித்தார்த்தன் பேரின்பநாயகம்
நியூயோர்க்
அமெரிக்கா.

### மனித நேசத்தின் ...

கடந்த சில மாதங்களாக திசையைப் படிக்கும் சந்தர்ப்பம் கிடைத்து வருகின்றது. திசையின் தீட்சண்யமான உலகப் பார்வை, தமிழ் இயக்களின் நேர்மையான பிரலாபங்களான கட்டுரைகள், தூய்மையான இலக்கிய இயங்களை வருடுகின்ற இலக்கிய விடயங்கள், மற்றும் மனித நேசத்தின் மகத்தான நிலையின திசைகாட்டிச் செல்வது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு நெருக்கடியான காலகட்டத்தில் விற்பனை நோக்கமற்ற, நிதானமான, தூய்மையான தொண்டாகவே திசையின் தொண்டு எனக்குப் புலனுகின்றது.

அற்புதமான கவிதைகளை திசைதருவதும் குறிப்பிடத்தக்கது.

பெரு. கணேசன்
அக்கராயன்குளம்.

# யானைகளுக்குச் சலரோகம் அமைச்சர் லலித் கவலை!

சீனிக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான கரும்புப் பயிரை, அதைச்சுற்றியுள்ள செவனகல காட்டுப்பகுதியிலுள்ள யானைகள் வந்து சாப்பிட்டு விடுவதால் இப்பகுதியிலுள்ள யானைகளுக்கு சலரோக வியாதி பீடித்திருப்பதாகவும், அதனுல் அவற்றுக்கு அழிவு ஏற்பட்டுவிடும் என்றும், இவற்றைத் தடுப்பது சீனிக் கூட்டுத்தாபனத்தின் பொறுப்பாகும் என்ற ரீதியில் அமைச்சர் லலித் பேசியுள்ளார்.

யானைகள் கரும்பை அளவுக்கு மீறிச் சாப்பிடுவதால் அவற்றுக்குச் சலரோகம் ஏற்படும் சாத்தியக் கூறுகள் உண்டா, விலங்குகளுக்குச் சலரோகம் ஏற்படும் காரணங்கள் என்ன? என்பன பற்றியெல்லாம் அமைச்சர் அதற்குரிய வைத்திய ஆய்வறிவாளர்களோடு கலந்து ஆலோசனை கேட்டபின்தான் கூறினுரோ என்னவோ! ஆனல் சீனிக் கூட்டுத்தாபனத்தைச் சூறையாடும் யானைகள் பற்றி கவனமெடுக்காமல் யாரும் இருக்கமுடியாது. □

# பல்லின மக்கள் கொண்ட அமைதிப்படை!

— தயான்

இலங்கைப் பிரச்சினை பற்றி, வட—கிழக்கு மாகாணசபையின் முன்னாள் அமைச்சரான தயான் ஜயதிலக லங்கா காடியனில் எழுதிய கட்டுரையில் முன்வைக்கும் சில தீர்வுகளாவன:

சிங்கள மக்களும் விடுதலைப் புலிகளும், இந்திய அமைதிப் படை இலங்கையை விட்டு வெளியேறவேண்டும் என்று கூறுகிறார்கள். சிங்களவர்கள் இந்திய அமைதிப்படையை வெளியேற்ற வேண்டும் என்று நிற்பது தீவிர இனத்துவேஷத்தின் அடிப்படையிலேயே. அதே நேரத்தில் உண்மையான அதிகாரப்பரவலாக்கம் வட—கிழக்கில் நிகழாதவரைக்கும் எல்.ரி.ரி.ஈ. யினரை அடக்க முடியாது. ஆகவே இவற்றை மேற்கொள்ளாமல் இந்தியப் படையை உடனடியாக வெளியேற்றுவதை, நான் விரும்பவில்லை. அவர்களை வெளியேற்றும் பட்சத்தில் அதற்கான பிரதியீடு ஒன்று செய்யப்பட வேண்டும். அதாவது வட—கிழக்குப் பகுதியில் ஐ. நா. சபைக்குரிய ராணுவம் மாதிரியான பல்லின மக்களை இணைத்த ராணுவத்தின் மூலம், தமிழ் மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும். இது சகல தரப்பினரையும் சாந்தப் படுத்த ஏதுவாக அமையலாம்.

# "நைற்" பட்டம் பெறும் 'மை ஃபெயார் லேடி' நடிகர்

'மை ஃபெயார்லேடி' திரைப் படத்தில் நடித்ததன் மூலம் உலகப் புகழ்பெற்ற நடிகரான றெக்ஸ் ஹரிசனுக்கு கடந்த மாத இறுதியில், பக்கிங்ஹாம் அரண்மனையில் எலிசபெத் மகாராணியால் நைற் (Knight) பட்டம் வழங்கி கௌரவிக்கப் பட்டது. இவ்வைபவத்தின் போது மை ஃபெயார்லேடியில் இடம்பெற்ற இசை, வாத்தியக் கோஷ்டியினுல் இசைக்கப் பட்டது.

81 வயதுடைய இந்நடிகரின் உண்மைப் பெயர் றெஜினோல்ட் என்பதே. எனினும் இவர் இனிமேல் 'சேர் றெக்ஸ்' எனவே அழைக்கப்படுவார்.

மேற்படி வைபவத்திற்கு தனது மனைவி மேர்சியாவோடு சென்றிருந்த இவர், தனது அனுபவத்தைப் பின்வருமாறு கூறுகிறார்: "முழங்காலிட்டு நிற்பதும், அவ்வேளை எனது தோள்கள் மாறிமாறி தட்டப்படுவதும் ஒரு சுவையான அனுபவம்தான்; இந்தச் சடங்குகளை மிகவும் விரும்புகிறேன்.

ஆங்கிலப் பேராசிரியர் ஹிக்கின்ஸ் என்ற பாத்திரத்தைத் தாங்கி நடித்ததின் மூலம் அழியா இடத்தைப் பிடித்துக் கொண்ட இவருக்கு இப்படத்தில் நடித்தமைக்காக 1964 இல் 'ஒஸ்கார்' (Oscar) பரிசு கிடைத்ததும் குறிப்பிடத் தக்கது. □

## மோகவாசல் நூல் வெளியீடு

ரஞ்சகுமார் எழுதிய மோகவாசல் சிறுகதைத் தொகுப்பு வெளியீட்டு விழா, நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு, யாழ். பல்கலைக்கழக செல்வநாயகம் மண்டபத்தில் நடைபெறும்.

செம்பியன் செல்வன் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் சித்திரலேகா மௌனகுரு, மு. பொன்னம்பலம், சு. வில்வரத்தினம், கா. சிவத்தம்பி ஆகியோர் ஆய்வுரைகளை நிகழ்த்துவர்.

# நலமெடுக்கப்பட்ட கழுதை!

கட்டுக் கடங்காத பால் உணர்வினுல் தூண்டப்பட்ட கழுதை ஒன்று, ஏனைய மிருகங்களுக்குத் தொல்லை கொடுத்ததின் காரணத்தினுல் அதற்கு "நலம்" எடுக்கப்பட்டது.

இதைச் செய்தவர் பிரபல பிரெஞ்சுநடிகையான பிறிஜிற் பாடோ வாகும். இந்நடிகையின் அடுத்த வீட்டுக் காரருக்குச்சொந்தமான இக்கழுதை, பிறிஜிற் பாடோவின் சொந்தக் கழுதைக்கு தன் காமச் சேட்டைகளால் உபத்திரவம் கொடுத்ததோடு, ஏனைய விலங்குகளையும் தொல்லைக்குள்ளாக்கியதால், அதற்கு உடையவரின் உத்தரவின்றி நலமெடுக்கப் பட்டது.

இது பற்றிக் கழுதையின் சொந்தக்காரர் எதிர்ப்புத் தெரிவித்துள்ளதோடு நஷ்ட ஈடு கோருவது பற்றியும் யோசித்துள்ளார்.

இத்தனைக்கும் நடிகை, விலங்குகளின் உரிமைக்காக குரல் கொடுக்கும் அணியைச் சேர்ந்தவராவர். □

# இந்தியாவும் இந்துசமுத்திரப் பிராந்தியமும்

உருளும் உலகில்

சி. சண்முகவடிவேல்

இன்று இந்து சமுத்திரப் பிராந்தியம் ஒரு பிரச்சினைக்குட்பட்ட பகுதியாக மாறியுள்ளது. இப்பிரச்சினைக்கு மூல காரணமாகவும், இப்பிரச்சினைகளை வளர்ப்பதற்குரிய காய் நகர்த்தியாகவும் இருப்பது இந்தியாவே.

முன்னர், அதாவது 1971 ஆம் ஆண்டளவில் இந்து சமுத்திரப் பிராந்தியத்துக்கு அச்சுறுத்தல் தருபவையாகவும், அதனுல் அதையொட்டிய இந்தியா உட்பட்ட நாடுகளுக்கு பீதியை ஏற்படுத்துபவையாகவும் இருந்த காரணிகள் வேறு. சுயஸ்கால்வாயை விட்டு இங்கிலாந்து தன் பிடியைத் தளர்த்திக் கொண்ட காலத்திலிருந்து, இந்து சமுத்திரப் பகுதி ஒரு வெற்றிடமாக, அதிகாரம் உடையவர்களை உள்நுழையத் தூண்டுவதாக அமைந்திருந்தது. அமெரிக்கா, ரஷ்யா, இங்கிலாந்து, பிரான்ஸ் போன்ற நாடுகள் இதற்குள் நுழைந்து தமக்குரிய தளங்களை ஸ்தாபிக்கும் நோக்குடையனவாய் இருந்தன. இந்தப் பீதியின் அடிப்படையாக எழுந்ததே அன்று "இந்து சமுத்திரப் பிராந்தியம் ஓர் அமைதி வலயமாகப் பிரகடனப் படுத்தப்பட வேண்டும்" என்ற கோரிக்கை. இந்தக் கோரிக்கைக்கு அழுத்தம் கொடுத்து இலங்கை ஐ. நா. சபையில் இதைப் பிரேரித்தது இந்தப் பயத்தின் விளைவே. 1990 இல் இலங்கையில் இது பற்றிய—அதாவது இந்து சமுத்திரப் பிராந்தியத்தை அமைதி வலயமாகப் பிரகடனப் படுத்துவது சம்பந்தமாக — மாநாடு ஒன்றும் இடம் பெறவுள்ளது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

1970 களில், இந்துசமுத்திரம் மேற்கு நாட்டு வல்லரசுகளால் ஆக்கிரமிக்கப்பட்டு விடும் என்ற அச்சமே நிலவி வந்தது. ஆனுல் இன்று நிலைமை வேறு. மேற்கு நாடுகளின் ஆதிக்கம் இங்கு தலை நீட்டாமல் தடுக்கப்பட்ட போதும் இன்று அவற்றின் இடத்தை, இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் பெரிய நாடான இந்தியாவே ஆக்கிரமித்துள்ளது. அதனுல் இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் அமைதி நிலை மேற்கு நாடுகளால் பாதிக்கப்படும் என்றிருந்த நிலைமை மாறி, அது இந்தியாவாலேயே பாதிக்கப் படலாமெனத் தற்போது அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

இந்நிலைமாற்றத்துக்குரிய காரணிகள் என்ன ?

முன்னர் எழுபதுகளில் இந்தியா பெரியளவு தன்னை வளர்த்துக்கொண்ட நாடாய் இருக்காததோடு, அதற்கு முகம் கொடுக்க அன்று பாரிய பிரச்சினைகள் இருந்தன. சீனுவோடு எல்லைப்பிரச்சினை, பாகிஸ்தானேடு மோதல், கோவா பகுதியைத் தனதாக்கிக் கொள்ளல் போன்றவை அதை அடக்கி வைத்திருந்தன. ஆனுல் அதே நேரத்தில் சீனு போன்ற மிகப் பெரிய அயல் நாட்டினதும், இன்னும் அமெரிக்கச் சார்பு கொண்ட பாகிஸ்தானது அச்சுறுத்தல்களும் சேர்ந்து இந்தியாவின் நிலைப் பாட்டில் மாற்றங்களை ஏற்படுத்தின. அதாவது முன்னர் எந்த நாடுகளின் பிரச்சினைகள் இந்தியாவை தனக்குள் முடக்கி வைத்திருக்கச் செய்தனவோ, அவையே அதன் ஒடுங்கிய நிலைப்பாட்டையும் 'பஞ்ச சீல' உச்சரிப்பையும், கைவிடச் செய்து பெரிய அபிவிருத்திக்கும் அதனுல் ஏற்பட்ட விரிவுக்கும் வழிவகுக்கச் செய்தன. சீனு அணுக்குண்டை உற்பத்தி செய்து பயமுறுத்தியது. பாகிஸ்தானும் அமெரிக்காவின் அனுசரணையோடு இதையே செய்தது. ஆகவே இந்தியாவும் ராஜஸ்தான் பாலைவனத்தில் அணுக்குண்டு பரீட்சை செய்து தன்னை உறுதிப்படுத்தியது. பாகிஸ்தான் ஏவுகணைகளை உற்பத்தி செய்வது பற்றிக் கத்தியது. இந்தியா வெற்றிகரமாக "அக்னி"யை வான் வெளிக்கு அனுப்பி வைத்தது.

இன்று இந்தியாவின் வல்லரசுத்தன்மை இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் அழுத்தப்பட்டுள்ளது. அமெரிக்க யுத்தக் கப்பல்களோ ரஷ்ய யுத்தக் கப்பல்களோ, இங்கு வரத் தேவையில்லை. இந்தியாவின் 'விராட்' யுத்தக் கப்பல் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் தன் உடல் வலிமையை நாலா புறமும் விசுக்கிக்கொண்டு நிற்கிறது. ஒருமுறை நெப்போலியன் கூறினன், "பிரெஞ்சு சிம்மாசனம் வெறுமையாக இருந்தது. அதனுல் நானே அந்த இடத்தை எடுத்துக் கொண்டேன்" என்று. இன்று வெறுமையாகக் கிடந்த இந்து சமுத்திரப் பிராந்தியத்தை இந்தியா எடுத்துச் சூடிக் கொண்டுள்ளது!

இந்தியாவோடு நட்புறவு உடன்படிக்கை செய்துள்ள ரஷ்யா முன்னர் இந்து சமுத்திரப் பிராந்தியம் ஓர் அமைதி வலயம் ஆக்கப்படவேண்டும் என்பதையே பெரிதும் விரும்பியது. காரணம், அதன் தெற்கு எல்லைகள், இந்து சமுத்திரப் பிராந்தியத்திலிருந்து அமெரிக்காவாலோ வேறு மேற்கு நாடுகளாலோ ஏவுகணைகளால் தாக்கப்படக் கூடியவையாய் இருந்தன. ஆனுல் தற்போது இந்தப் பிராந்தியத்தில் அவை இல்லை. இருப்பது அதன் தேச நாடான இந்தியாவே. இதனுல் அதற்கு அந்தப் பயம் இனி இருக்காது. கூடவே தற்போது கொர்பச்சேவ்மேற்கொண்டுள்ள மேற்கு நாடுகளுக்கிடையேயான யுத்த நிறுத்த, ஆயுதக்குறைப்புப் போக்குகள் அதற்குச் சாதகமாகவே உள்ளன. 'நேட்டோ' நாடுகளுக்குள் கொர்பச்சேவின் ஊடுருவல் இதையே காட்டுகிறது. அத்தோடு அமெரிக்காவும் இந்துசமுத்திரத்தை அமைதி வலயமாகப் பிரகடனப் படுத்தக் கூட்டப்படவிருக்கும் மாநாட்டில் (1990) பங்குபற்றுவதை விரும்பவில்லை என்றே தெரிய வருகிறது. காரணம், இதில் பங்குபற்றினுல் அதன் கப்பல்கள் இப்பிராந்தியத்தில் தலைகாட்டும் நிலைமை ஏற்படாது போய்விடும் என்பதால்.

இந்நிலை இந்தியாவுக்கே சாதகமாக அமையலாம். இலங்கை, மாலைதீவு, நேபாளம்போன்ற நாடுகளைக் கட்டுப்படுத்திக் கொண்டிருக்கும் இந்தியா, இனி, இந்திய வம்சாவழிகளைக் கொண்ட மொறீஷியசைக்கூட தனதாக்கிக் கொண்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்று, அரசியல் வட்டாரங்கள் கூறுகின்றன. □

# போராளிகளுக்கு

## வைத்தியர்கள் சிகிச்சை அளிக்கலாமா ?

வளவன்

சட்டத்தை நிலைநாட்டி வரும் அதிகாரிகளுடன் ஆயுதங் கொண்டு சண்டையிடும் போது அல்லது நாசவேலையின்போது அல்லது இயல்பாக நோய்வாய்ப்படும் போராளிகளுக்கு சிகிச்சையளிக்க டொக்ரர்களை அழைப்பது, இப் பிரச்சினைக்குரிய நாட்களில், எவ்வகையிலும் அதிசயமல்ல. டொக்ரர் மாத்திரமல்ல தாதிகள், பல்வைத்தியர், ஆயுர்வேத வைத்தியர் மற்றும் 'சுகம் பேணுவோர்' போராளிகளால், நிர்ப்பந்தப்படுத்தியோ அல்லவோ தமக்குச் சிகிச்சையளிக்கக் கோரப்படலாம். சிலவேளை அத்தகைய ஆளை உண்மையில் போராளி தானு என இனம் காண்பது சாத்தியமல்ல; 'சண்டையின் போது அருகில் நின்று காயப்பட்ட அப்பாவி' என அந்த ஆள் கூறலாம்.

சிகிச்சையளிப்பது எந்தப் பிரச்சினையையும் கிளப்பாது. 'நோயாளிகள்' போராளிகளோ கொலையாளிகளோ, மாமாக்களோ விலைமாதரோ, ஞானிகளோ பாவம்புரிந்தவரோ, எல்லாருக்கும் கேட்கவும் சிகிச்சை பெறவும் உரிமையுண்டு.

ஒரு டொக்ரரைப் பொறுத்தவரை தன் உதவியைக் கோரும் அனைவருக்கும் சிகிச்சையளிக்கும் அவசியம்—அவர் அதற்குத் தகுதியானவரெனின் — தொன்றுதொட்டே, மருத்துவத் தொழிலின் நீதியாகவும் சமூகக் கட்டுப்பாடாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டு வந்தது. ஆகவே போராளிகளை சிகிச்சைக்குட்படுத்துவது பூரணமாகச் சட்டரீதியானது என்பதல்ல பிரச்சினை; ஆனுல் பின்னுல் என்ன நடக்கிறது என்பதே பிரச்சினை.

இன்றைய சட்டப்படி ஒரு போராளியைப் பற்றிய தகவல்களைப் பொலிசிற்குக் கொடுக்கத் தவறும் ஒருவர் குற்றவாளியாகக் காணப்படின் ஏழு ஆண்டுகள் சிறைத் தண்டனை பெறுவார். போராளிகளுக்குச் சிகிச்சையளிக்கும் ஒரு டொக்ரர் இதைவிட கூடிய தண்டனைக்கு ஆளாகலாம். அத்தகைய தண்டனை அனுபவித்த பின்னர், அவர் அதிர்ஷ்டசாலியென்ருல்,அவர் பெயர் மருத்துவர் பட்டியலில்இருந்து(Medical Register) ரத்துச் செய்யப்படாதிருக்க வேண்டும்.

வைத்தியர் — நோயாளி தொடர்பான கொள்கை ஒன்றுண்டு. அதனை 'மருத்துவ அந்தரங்கம்' (Medical Confidentiality) என்பர். இதனை வைத்தியர் அனைவரும் கடைப் பிடிப்பது எதிர்பார்க்கப்படுகிறது. அதாவது வைத்தியர் மூன்ருமவருக்கு, தொழில் புரியும்போது ஒரு நோயாளியிடமிருந்து தெரிந்துகொண்டவற்றை வெளியிடக்கூடாது. இக் கொள்கை மருத்துவ வரலாற்றில் மிகத் தொன்மையான காலத்தே, ஏற்றுக் கொள்ளப்பட்டு, 'ஹிப்போகிரட்டிக் சத்தியம்' என அழைக்கப்படுகிறது. (Hippocratic Oath). கி. மு. 500இல் எழுந்த இக் கொள்கை வருமாறு: "சிகிச்சையின்போது நான் காண்பதை அல்லது அறிவதை அல்லது சிகிச்சைக்கு வெளியில் மனிதனின் உயிர்பற்றி அறிவதை, எக்காரணம் கொண்டும் வெளியிடக் கூடாது. அத்தகைய விடயங்களை, வெளியில் பேசக் கூடாதவையாக, இரகசியமாக என்னுடன் வைத்திருப்பேன்". இககொள்கை கடைப் பிடிக்கப்படவில்லை என்பது உண்மையென்ருலும், வைத்தியத் தொழிலில் அது சர்வதேச ரீதியில் மதிக்கப்படுகிறது என்பதும் உண்மை.

1948 இல் வெளியான ஜெனேவா பிரகடனம் - உலக மருத்துவ கழகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டது- வருமாறு: "ஒரு டொக்ரர் தன் நோயாளி சார்பில் முழு அந்தரங்கம் பேண வேண்டியவர்; அவர் மீது வைக்கப்பட்ட நம்பிக்கை காரணமாக."

1968 இல் மீளமைக்கப்பட்ட வசனம் வருமாறு: "எனக்குத் தரப்பட்ட இரகசியத்தை நோயாளி இறந்த பின்பும் மதிப்பேன்."

ஹிபுறு பல்கலைக் கழகத்தின் பிரகடனம்: (1952) வருமாறு: "உன்மேல் நம்பிக்கை வைத்துள்ளவருக்கு உண்மையாய் இரு. அவரது இரகசியங்களை வெளியிட்டு கதை சொல்லித் திரியாதே."

சிறீலங்காவில் மருத்துவத் தொழிலுக்கான ஒழுங்கு விதிகள் (1986) கூறுவது:

"ஒரு டொக்ரர் தன் தொழிற்துறையில் நேராகவோ மறைமுகமாகவோ அறிந்ததை, தானுக மூன்ருவது நபருக்குக் கூறக்கூடாது, தொழில் ரீதியான இரகசியம் கவனமாகப் பேணப்படவேண்டும்."

நம்பிக்கைக் கொள்கைகள் காலத்துக்குக்காலம் மீறப்படுகிறதென்பது உண்மைதான். சட்டவாதிகள், டொக்ரர் போலல்லாமல், வாடிக்கையாளர் பற்றிய அந்தரங்கச் செய்திகளை வெளியிடுவதற்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளனர்.

எதைச் சொன்னபோதும், எந்த நாட்டின் அரசும், சிறீலங்காவில் அல்லது பிற இடத்தில், மருத்துவ அந்தரங்கத்தின் பாதுகாப்பிற்கு முதல் இடம் கொடுக்குமோ என்பது சந்தேகமே. நோயாளிகளாயினும், அவர்கள் இத் துறையில் இறங்கி விட்டால் இதே நிலையில்தான் இருப்பார்கள்.

ஆகவே, இவ்விடயத்தில், வேறுபாடு என்ற கேள்விக்கே இடமில்லை. எங்கே, பின்னர், தீர்வு?

ஒரு சாதகமான அணுகல், இவற்றை 'சட்ட வழக்கு'க்கு விடுவது. அங்கே பல சுப்றீம் கோட் முடிவுகள், பின்னுல் வந்த வழக்குகளுக்கு முன்னுதாரணமாய் உள்ளன. ஆனுல் அத்தகைய பரிணும வழிகள் நீண்ட காலத்தை எடுக்கலாம்; அக்காலத்தினுள் தீர்வுகாண முடியாத தொல்லைகள் மருத்துவத் தொழிலில் உள்ளவர்களுக்கு ஏற்படலாம், தவருன சட்டத்தலையீடுகளால்.

மருத்துவத் துறையில் உள்ளவர்களை அசௌகரியத்திற்கும் ஏற்றுக்கொள்ள முடியாதநிலைமைக்கும் உட்படுத்துவது ஆட்சிப் பீடத்தின் விருப்பமல்ல என்று கருத்து வெளியிடப்படவுமில்லை. ஆனுல் அது நடந்துவிட்டது, விருப்பமில்லாமலே என்ருலும், ஜனநாயக வழியில் விமர்சனம் அவசியம்.

நன்றி: ஐலன்ட் □

## "போராட்டமே எனது வாழ்க்கை" —

# கறுப்புமலர் நெல்சன் மண்டேலா



சென்றவாரத் தொடர்ச்சி

மண்டேலா போன்ற தலைவர்கள் சிறையிலிருந்த போதும் ஆபிரிக்கமக்களின் போராட்டங்கள் ஓயவே

*"அரசாங்க வன்முறையால் அதற்கெதிரான வன்முறையைத் தான் வளர்க்க முடியும். இறுதியில் அரசாங்கத்துக்கு நல்ல புத்தி வராமல் போனால், அரசாங்கத்துக்கும் எனது மக்களுக்கும் இடையிலான பூசல் வன்முறை வழியில் தீர்க்கப்படும்"*

யில்லை. இதனால் 1978 இல் பிரதமர் பதவிக்கு வந்த P. W. போத்தா வகுத்த நெறியே பரிபூரண உத்தி (Total Strategy) என்பதாகும். அவரின் பாதுகாப்புத்துறை அமைச்சர் மக்னஸ் மலான் அதனைப் பின்வருமாறு விளக்கினார்: "இன்று தென்னாபிரிக்கா பரிபூரணப் போரில் ஈடுபட்டுள்ளது. இதுபற்றி படைவீரர்கள் மட்டும் கவலைப்பட்டால் போதாது. ஒவ்வொருவருக்கும் இதில் சம்பந்தம் உண்டு. ஒவ்வொருவருக்கும் இதில் பங்கு உண்டு". அதாவது வெள்ளையர் சமுதாயம் முழுவதையும் இதில் பங்கு கொள்ளச் செய்யவேண்டுமென்பதே அரசின் விருப்பமாகும்.

மண்டேலாவை விடுதலை செய்ய வேண்டுமென்ற கோரிக்கை வலுப்பெற்று வருகிறது. அவரை சில நிபந்தனைகளுடன் விடுதலை செய்ய நிறவெறி அரசு முன்வந்தது. எனினும் அந்த நிபந்தனைகளை மண்டேலா ஏற்றுக்கொள்ளாதபடியால் அவரின் சிறைவாசம் தொடர்கிறது. அந்த நிபந்தனைகள் கேலிக் கூத்தானவை. அவர் பிறந்த பகுதியான டிரான்ஸ்காய் பகுதியில் மட்டுமே அவர் வசிக்க வேண்டும். வேறெங்கும் செல்லக் கூடாது என்பது ஒரு நிபந்தனை. பின்னொருமுறை அவர் தென்னாபிரிக்காவை விட்டு வெளியேறி விடவேண்டுமெனவும் திரும்பி வரவே கூடாதெனவும் நிபந்தனை விதிக்கப்பட்டது. மண்ணின் மைந்தரான அவர் அதனையும் நிராகரித்தார். இந்த நிபந்தனைகள் குறித்தும் தமது மக்கள் அனுபவிக்கும் துன்பங்கள் பற்றியும் விளக்கிய அறிக்கையில் அவர் பின்வருமாறு கூறினார்:

□ "என் சுதந்திரத்தைப் பெரிதும் மதிக்கிறேன். ஆனால் அதைவிடவும் உங்கள் சுதந்திரத்திற்காகக் கவலைப்படுகிறேன். நான் சிறைப்பட்டதிலிருந்து எத்தனையோ பேர் உயிரிழந்திருக்கிறார்கள். எத்தனையோ பேர் சுதந்திரத்தை நேசித்து இன்னலுற்றிருக்கிறார்கள். கணவரை இழந்து கைம்பெண் ஆனவர்களுக்கு, ஆதரித்தோரை இழந்து அனாதையானவர்களுக்கு, பெற்ற செல்வத்தைப் பறிகொடுத்த தாய்தந்தையருக்கு — அன்புக்குரியவர்களை இழந்ததால் வருந்தி அழுதவர்களுக்கெல்லாம்— நான் கடன் பட்டிருக்கிறேன். தனிமையும் வெறுமையும் சூழ்ந்த இந்த நீண்ட ஆண்டுகளில் அல்லலுற்றது நான் மட்டுமல்ல. வாழ்க்கையை நேசிப்பதில் உங்களுக்கு நான்சளைத்தவன் அல்லன். ஆனால் விடுதலை பெற்று வெளியே வரவேண்டும் என்பதற்காக எனது பிறப்புரிமையை நான் விற்கமுடியாது. மக்களது பிறப்புரிமையையும் நான் விற்கத் தயாரில்லை. மக்களின் பிரதிநிதியாகவும், தடைசெய்யப்பட்ட உங்கள் ஸ்தாபனமாகிய ஆபிரிக்கத் தேசியக் கொங்கிரசின் பிரதிநிதியாகவுமே நான் சிறையிலிருக்கிறேன்."

□ "மக்கள் ஸ்தாபனம் தடைசெய்யப்பட்டிருக்கிறபோது எனக்குச் சுதந்திரம் தருவதாகச் சொல்கிறார்களே, இது என்ன சுதந்திரம்? கடவுச் சட்டத்தை மீறிய குற்றத்திற்காக என்னைக் கைது செய்யலாம் என்கிறபோது எனக்குச் சுதந்திரம் தருவதாகச் சொல்கிறார்களே இது என்ன சுதந்திரம்? எனதன்பு மனைவி நாடுகடத்தப்பட்டு பிராண்ட்ஃபோர்ட்டில் வசிக்கிறபோது, குடும்ப வாழ்க்கை நடத்துவதற்காக எனக்குச் சுதந்திரம் தருவதாகச் சொல்கிறார்களே, இது என்ன சுதந்திரம்? நான் நகரப்பகுதியில் வசிக்க விரும்பினால் அதற்கு அனுமதி கேட்டாகவேண்டும் என்கிறபோது எனக்குச் சுதந்திரம் தருவதாகச் சொல்கிறார்களே, இது என்ன சுதந்திரம்? நான் வேலை தேட விரும்பினால் எனது கடவுச் சிட்டையில் முத்திரை பெற்றாக வேண்டும் என்கிறபோது எனக்குச் சுதந்திரம் தருவதாகச் சொல்கிறார்களே, இது என்ன சுதந்திரம்? எனது தென்னாபிரிக்கக் குடியுரிமைக்கே மதிப்பு இல்லை என்கிறபோது எனக்குச் சுதந்திரம் தருவதாகச் சொல்கிறார்களே, இது என்ன சுதந்திரம்?"

□ சுமந்திரன் □

□ "சுதந்திர மனிதர்தாம் பேச்சுவார்த்தை நடத்தி உடன்பாடு காணமுடியும். சிறைப்படுத்தப்பட்டவர்களால் ஒப்பந்தம் செய்யமுடியாது. ......எனக்கும் மக்களாகிய உங்களுக்கும் சுதந்திரம் இல்லாதபோது நான் உறுதிமொழியும் தரமுடியாது; தரவும் மாட்டேன்."

□ "உங்களது சுதந்திரத்தையும் எனது சுதந்திரத்தையும் வெவ்வேறாகப் பிரிக்கமுடியாது. நான் நிச்சயமாய்த் திரும்பி வருவேன்."

### போராட்டமே வாழ்வு

தென்னாபிரிக்க மக்களின் வாழ்விற்காகவே தன்னை அர்ப்பணித்த மண்டேலா அவர்கள்,

*"தென்னாபிரிக்காவில் நடைபெறும் போராட்டம் அந்நியர்கள் அல்லது கொம்யூனிஸ்டுகளின் தூண்டுதலால் நடைபெறுவதாக அரசு ஏற்படுத்தி வரும் எண்ணம் முற்றிலும் தவறானது. தனி மனிதன் என்ற முறையிலும் எனது மக்களின் தலைவர்களில் ஒருவன் என்ற முறையிலும் நான் என்ன செய்திருந்தாலும் சரி, தென்னாபிரிக்காவில் நான் பெற்ற அனுபவத்தின் காரணத்தாலும், நான் பெருமையாகக் கருதுகிற எனது ஆபிரிக்கப் பின்னணியின் காரணத்தாலும் செய்தேனே தவிர, யாரோ வெளிநாட்டார் ஏதோ சொன்னார் என்கிற காரணத்தால் அல்ல"*

□ "இன்னலும் தியாகமும், போர்க்குணம் வாய்ந்த செயலும், இல்லாமல் சுதந்திரம் பெறமுடியாது. போராட்டமே எனது வாழ்க்கை. எனதுகாலம் முடிகிற வரைக்கும் சுதந்திரத்திற்காகத் தொடர்ந்து போராடுவேன்" என்று கூறினார். உண்மையில் அவருடைய வாழ்க்கை அங்ஙனமே அமைந்துவிட்டது. தற்போது தொடர்ச்சியான கால் நூற்றாண்டு காலம் அவர் சிறையிலிருக்கிறார். அக்காலத்தில் அவர் தமது சுயநலத்தை அறவே துறந்து நடந்துகொள்வது தெரிகிறது. அவரின் வாழ்க்கைச் செயற்பாடுகள், தெரிவித்த கருத்துகள் என்பன மூலம் தமது இலட்சியம் பற்றிய தெளிவு, சரியான விளக்கம், கொள்கை உறுதியுள்ளவராக மண்டேலா தோற்றமளிக்கிறார். அவரின் ஈடுபாடு, அர்ப்பணிப்பு என்பன உண்மையானதாகவும் பூரணமானதாகவும் இருக்கிறது. இவற்றால் தன்னை ஒறுக்கும் அவரின் சிறைவாசமே ஒருவகைச் சாத்வீகப் போராட்டமாக அமைந்துவிடுகிறது. வன்முறைப் போராட்டத்தில் நம்பிக்கையுள்ள அவர் உறுதிமிகுந்த சாத்வீகப் போராளியாகக் காட்சிதருகிறார். இந்த அமைதிப் போராட்டத்தின் தூய்மை காரணமாகஉலக மக்களின் உள்ளங்களிலெல்லாம் அவர் உன்னதமான இடத்தைப் பிடித்துவிட்டார். இதனால் வெளியே இருக்கும் மண்டேலாவைவிட சிறையுள் இருக்கும் மண்டேலாவே நிறவெறிக்கொள்கைக்கு பெரும் ஆபத்தாக விளங்குகின்றார். முன்னர் அவரே கூறியது போன்று மக்களினதும் தனதும் சுதந்திரம் பின்னிப்பிணைந்துள்ளதாகவே கருதுகிறார். சென்ற ஆண்டில் அவரின் 70 வயதுப் பூர்த்தி உலகமெங்கும் கொண்டாடப்பட்டது. அப்போது. நிறவெறி அரசு மண்டேலாவை அவரது மனைவி வின்னியும் மகள் ஸின்ஸியும் சிறையில் ஆறுமணிநேரம் சந்தித்து உடனிருக்கும் சலுகையை வழங்கியது. ஏனைய தனது சகோதர அரசியல் கைதிகளுக்குக் கொடுக்கப்படாத அச்சலுகையை மண்டேலா உடனடியாகவே நிராகரித்தார். அவரின் மனைவியும் மகளும் அங்ஙனமே செய்தனர். தனக்கென பிரத்தியேகமான சலுகை எதனையும் ஏற்றுக் கொள்ளாமலும் எந்த நொண்டிச்சாட்டுக்கூறி போராட்டத்திலிருந்து பின் வாங்காமலும் அவர் இருந்து வருகிறார். எனினும் அவரின் தன்னடக்கம் போற்றத்தக்கது. போராட்டத்தில் தனது பங்களிப்புப்பற்றிக் கூறும்போது,

□ "பெரியதொரு படையில் இடம்பெற்றிருப்பவர்களில் நானும் ஒருவன். வெற்றி அல்லது சாதனை என்று ஏதாவது உண்டென்றால் அதற்கான பெருமை இந்தப்படையில் இருக்கிற எல்லோரையும் சாரும். முன்னேற்றத்திற்குக் காரணம் எனது உழைப்பு மட்டுமன்று. எனது தோழர்களும் நானும் — உள்நாட்டிலும் வெளிநாட்டிலும்—ஆற்றியுள்ள கூட்டுப்பணியின் விளைவாகவே முன்னேற்றம் கண்டுள்ளோம்" எனக் கூறியிருப்பது கவனிக்கத்தக்கது.

இனங்களிடையே உண்மையான இணக்கம் காண்பதே நோக்கமாகக் கொண்ட அவர்,

□ "நான் இனவெறியன் அல்லன்; இனவெறியைக் கட்டோடு வெறுப்பவன். இனவெறி என்பது கறுப்பரிடமிருந்து வந்தாலும், வெள்ளையரிடமிருந்து வந்தாலும் அநாகரிகமானது, அருவருக்கத்தக்கது" எனத் தனது நிலைப்பாட்டினைத் தெளிவுபடுத்தியிருக்கிறார். தென்னாபிரிக்க மண்ணை ஆக்கிரமிப்புச் செய்து ஆண்டுகள் பலவாக அந்த மண்ணின் மைந்தர்களைத் துன்புறுத்தி வரும் வெள்ளையர்களிடம் எவ்வகையான வெறுப்போ குரோதமோ காட்டாத சிறந்த தலைவராக அவர் இருக்கிறார். இத்தகைய தலைவரின் வாழ்நாளிலேயே இனஒதுக்கல் கொள்கையை முடிவுக்குக் கொண்டு வருதல் வெள்ளையருக்கு மிகுந்த நலம் தருவதாக இருக்கும். இதனை தென்னாபிரிக்க நிறவெறி ஆட்சியினரும், அவர்களுக்கு மறைமுக ஆதரவு வழங்கும் இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற மேற்குலக நாடுகளும் உணர்ந்ததாகத் தெரியவில்லை. இதனால் சென்ற ஆண்டு தொடக்கம் காசநோயினால் துன்புறும் வயது முதிர்ந்த நெல்சன் மண்டேலாவின் சிறைப்போராட்டம் தொடர்கிறது.

*"அரசு எங்களோடு பேசுவதற்கோ நாங்கள் கூறுவதைக் கேட்பதற்கோ முன்வரவில்லை; மாறாக, எங்களை ஆபத்தான முரட்டுப் புரட்சிக்காரர்களாகவும் ஒழுங்கைக் குலைத்துக் கலகம் செய்யத் துடிக்கிறவர்களாகவுமே காட்ட முயன்றது".*

போராட்டத்தை முதன்மைப்படுத்தும் மண்டேலாவின் வாழ்க்கை தற்போதைய நிலையில் நமக்கு மிகுந்த முன்மாதிரியாக அமைகிறது. ஒரு மந்தைப்போக்கில், ஏனோதானோவென்று, ஓர் இயந்திர ரீதியில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். மேற்போக்கான வெளிப்பூச்சு நாகரிகமே மேம்பட்டு நம்மை வழிநடத்துவதாகவுள்ளது. இவற்றை விடுத்து இந்த அவலங்கள் ஏன் வந்தன என்பது குறித்து நாம் ஆழ்ந்து சிந்திக்கவேண்டும். மிகுந்த அடக்கத்துடன் நம்மை நாமே ஆராய வேண்டும். இங்ஙனம் சிந்திக்கத் தொடங்கிய பின் தான், "போராட்டமே வாழ்க்கை" என்பதின் கருத்து நமக்குப் புலப்படத்தொடங்கும். மகாத்மா காந்தி, மண்டேலா போன்றோர் செய்தது போல் நம்மை ஒறுக்காமல், துன்பங்களை ஏற்றுக்கொண்டு முன்செல்லாமல், தியாக உணர்வுடன் செயற்படாமல் நம்வாழ்வில் விடிவு ஏற்படாது. ஒவ்வொருவரும் அந்தச் சரியான உணர்வுடன் வாழ்வதற்கான முயற்சிகளில்இயன்ற அளவு ஈடுபடவேண்டும். அத்தகைய முயற்சிகள்தான் மனித வாழ்வுக்கு மகத்துவம் சேர்ப்பவை.

ஆதாரம் : தியாகு எழுதிய நெல்சன் மண்டேலா நூல். □

# விழாக்கள், சடங்குகள், சம்பிரதாயங்கள்

## — ஒரு சிந்தனை

இன்று ஈழத்தில் மணிவிழா வைபவங்கள் பிரபலமாகி வருகின்றன. இது எமது பழைய யாழ்ப்பாண மரபு அல்ல. தமிழ்நாட்டில் இருந்து புதிதாகக் கடன் வாங்கிய சம்பிரதாயம். ஏற்கனவே பிராமணர்கள் மத்தியில் மட்டும் அறுபதுக்கறுபது கல்யாணம், மணிவிழா என்பவை வழக்கிலிருந்து வந்தன. இன்று இது ஏனைய ஈழத்தமிழர்களிடையே, பல்துறைப் பிரபலம் மிக்கவரிடையே ஒரு மரபாகி வருகிறது. இவற்றில் பல அறிஞர்கள், எழுத்தாளர் என்போரும் கலந்து கொள்வதனால் மக்கள் பலரும் இதை அங்கீகரிக்க ஆரம்பித்து விட்டார்கள். இது சரிதானா?

ஏற்கனவே நமது சமுதாயத்தில் விழாக்கள், சடங்குகள், சம்பிரதாயங்கள் என்பவை மிக அதிகளவு ஆக்கிரமிப்பு செய்து வருகின்றன. மனிதனின் வாழ்நாளில் பாதி நித்திரையில் கழிகிறதென்றால் எமது சமுதாயத்திலோ மிகுதி பாதியின் முக்காற் பங்கும் பெரும்பாலும் சடங்குகள், சம்பிரதாயங்களில் கழிகின்றன. மிஞ்சிய அளவுகூட உயிர்த்துடிப்புள்ள வாழ்வை உடையதாயில்லாமல் வெற்றுச் சடங்கின் நகர்வாக மாறிவிட்டநிலை. மொத்தத்தில் வாழ்க்கையே வெற்றுச் சடங்காக மாறி விட்டது. இதிலே மேலும் மேலும் புதிதாக நாம் அறிமுகப்படுத்தும் சடங்குகள், விழாக்கள் எல்லாம் சீரழிந்த கலாசாரத்தின் சீழ் நிரம்பிய கொப்புளங்களாகவேதான் தோற்றுகின்றன.

புதிய சடங்குரீதியான இந்த வைபவங்கள் பல பணம் படைத்த புள்ளிகளின் பார்வையில் பட்டதுமே, அவர்களின் பெட்டிக்குள்ளிருக்கும் வெள்ளிப்பணங்கள் துள்ளிக் குதிக்கத் தொடங்கி விடுகின்றன. ஏற்கனவே முந்திய காலங்களில் பல்வேறு அரச கௌரவப் பட்டங்களை — சமாதான நீதவான் போன்றவை — பணம் கொடுத்துப் பெற்றேனும் படாடோபமான விழாக்களின் நாயகர்களாக வலம் வந்த அவர்களுக்கு, தற்போது அந்த வகைப் பட்டங்கள் எல்லாம் கேலிக்கூத்தாகிவிடும் என்பது தெரியும். அந்த மனநிலைக் களிப்புகளுக்கேற்ப வேறேதும் அற்றிருந்த பிரபல புள்ளிகளுக்குக் கை-கொடுப்பதாக, இந்த மணிவிழாக்கள் மாறிவிட்டன. பிரபலம் விரும்பிகளுக்கு சரியான மாற்றீடாக இந்த மணிவிழா. பெரிய புள்ளிகளிடம் பிலாக்காய்ப் பிசின் போல ஒட்டித்திரியும் பலர், அவர்களிடம் இருந்து 'சுளை' பிடுங்க வசதியாக அவர்களின் மனநிலைகளுக்குத் தக்கவாறு எண்ணெய் பூசவும், அவர்களும் மசிந்து பணத்தை வாரி இறைத்துச் செலவிட்டு விழா எடுக்கிறார்கள். அதற்கென்று மணிவிழா மலர்களும் தயாராகின்றன. அவர்களின் பங்கையும் பணியையும் பற்றி விஸ்தாரமான விளக்கங்கள் அளித்து பல்கலை அறிஞர், எழுத்தாளர் கட்டுரை, வாழ்த்துரை தயாரித்து வழங்குவதும் ஒரு சம்பிரதாயமாகிவிட்டது. பெரிய பிரபலங்களின் பிரபல முகங்களுக்கு அஞ்சி இவர்கள் நிகழ்த்தும் இந்தப் பித்துக்குளித்தனம், பிரபலங்களுக்கு மக்கள் மத்தியில் ஒரு மயக்கத்தை ஏற்படுத்தி, அங்கீகாரத்தையும் பெற்றுத்தர ஏதுவாகி விடுகின்றது. தம்முடைய 'அறுபதி'ன்போது 'மணி'விழா நடாத்த அவை உதவும் என்ற, நாளைய நப்பாசைக்கான இன்றைய சப்புக் கொட்டலாகவே இதை எடுத்துக் கொள்ள வேண்டும்.

அறிவறிந்தோர் பலரும் இவற்றை அங்கீகரிப்பதும், பின்பற்றுவதும் தேவைதானா? சரிதானா? என்ற கேள்வி இன்றைய எமது இனம் படும் துயரின்போது உக்கிரமாகவே ஒவ்வொரு மனங்களிலும் எழும். ஆனால் அதற்குக் குரல் தரவல்லவர் யாருமில்லை. ரோம் நகரம் தீப்பற்றி எரிகையில் பிடில் வாசித்த நீரோ மன்னன் பற்றி பலரும் சொல்லுவர். ஆனால் இங்கே விழாநாயகர்களாக வலம்வருவோரும், அவருக்குக் குடை பிடிப்போரும் எந்த ரகத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை, நாம் இங்கு நினைத்துப் பார்க்க வேண்டும். மக்களைப்பற்றியும், மக்கள் இலக்கியம் பற்றியும் பெரிதும் பேசப்படும் இன்றைய நாளில், மக்களின் துயரில் பங்கெடுக்காவிடினும் அதற்கெதிரான கேளிக்கைகளில் பங்கெடுத்தலையென்றாலும் நாம் தவிர்க்கவேண்டும். பிரபல்யத்துக்காக ஏங்கும் மனோநிலைகளை ஊக்குவித்தல் தகுமா? சாதனையாளன் ஒருவனை பிரபல்யமும் பாராட்டும் தானாகத் தேடிவரும். அப்போதுங்கூட மனச்சாட்சியுள்ள ஒருவன் தேசத்தின், சூழலின் துயரநிலையை மனத்திலிருத்தி தன்னடக்கத்துடன் அதை மறுப்பான். அதற்காகத் தனது நேயர்கள் விரும்பிச் செலவிடத் தயாராகும் பணத்தையும் பொதுநலன்களுக்கு உதவும் வகையில் திருப்பிவிடவே, அவன் விரும்புவான்.

**சு. வில்வரத்தினம்**

வாழும் காலத்தின், வயதின் அளவைக் கொண்டதல்ல ஒரு மனிதனின் சாதனை. அறுபதைப் பூர்த்திசெய்தல் இயற்கை நமக்கு அளித்த கொடை. பலரும் இளவயதிலேயே மரணத்தைத் தழுவிக் கொள்ளும் இன்றைய—சோகம் நிறைந்த — இந்தத் தேசத்தில் அறுபதைப் பூர்த்தி செய்வோர் எல்லோரும் விழாக் கொண்டாட ஆரம்பித்துவிட்டால் அதைவிட இளைஞர்களைக் கேலி செய்யும் முறை, வேறு வேண்டியதில்லை. இளவயதிற்குள்ளேயே எண்ணரிய சாதனை படைத்துவிடும் பலரைப் பாராட்ட அறுபதுவரை காத்திருக்க வேண்டிய அவசியமுமில்லை. அதற்காகச் சாதனையாளன் ஒருவன் புகழுக்காக அல்லாடி அலைய வேண்டியதில்லை, வாழுங்காலம் குறுகியதாய் இருந்தாலும் தனது சாதனைகளையெல்லாம் சமூகத்துக்கென்று பூரணமாக அர்ப்பணித்துவிட்டு, அந்தச் சமூக உயர்விலே தனது உயர்வை அடையாளம் கண்டு, மேலும் உழைப்பதற்குத் தயாரான ஒருவனுடைய பெருமைக்கு வயது வரம்பே கிடையாது. வரலாறு காலமெல்லாம் அவன் சாதனை வாழ்வைச் சொல்லியபடியே இருக்கும்.

கலைஞர்கள், அறிவுஜீவிகள் என்போரின் பணி இங்கு பெரிது. காலதர்மத்தை உணர்ந்து செயல்படுவது, எழுதுவது என்பதை அவர்களே முன்னோடியாக உணர்த்தவும் நடக்கவும் வழிகாட்டவேண்டியவர்கள். வழிபாட்டிலிருந்து வாழ்க்கைமுறை வரை காலத்தையும் நேரத்தையும், பணத்தையும் விரயம் செய்யும் எமது போக்கெல்லாம் சீரழிந்த கலாசாரத்தின் நோய்க்கூற்றியல்பாகமாறிவிட்டதைக் கண்டு காட்டியவர்கள் அவர்களே. மக்கள் பலர் கதியற்றுக் கண்ணீர்சிந்தியலையும் நிலையிலே நாள்தோறும் கோயில்களில் கும்பாபிஷேகங்களிலே கல்லுக் கடவுளுக்கு பாலாபிஷேகங்கள், பட்டாடைசாத்தல்கள் எமது சிந்தனை முரணைக் காட்டுவதை நாம் உணரவேண்டும். கோயிலின் விக்கிரகங்களுக்குப் போலவே தமக்கும் திருமுழுக்கு, மஞ்சனம் ஆடும் மனநிலை மனிதர்களுக்கும் தொற்றிக்கொள்ளும் நிலை இங்கு. ஊரெல்லாம் கூடி தமக்கும் குடைபிடிக்கவேண்டும் தேரிழுக்க வேண்டும் என்ற ஆடம்பர, அலங்கார உற்சவ விரும்பிகளாய் இங்கு பலரும். அகத்தினை உள்ளிருந்து எழுகின்ற உண்மையின் வியாபகம் தான் நமக்கு உண்மையான குடை பிடிப்பு என்பதை, ஒரு மனிதன் உணரத்தலைப்பட வேண்டும். அதிலும் கலைஞர்கள், அறிவுஜீவிகள் அந்த உண்மையின் உதாரணராய் இருந்து வழிகாட்டவேண்டும். பிரபலம் விரும்பிகளுக்கு ஒத்தூதிகளாய் மாறாமலும், கிலுகிலுப்பை கொட்டுபவர்களாய் மாறாமலும், உரிய இடத்தில் உண்மையைப் புட்டுக்காட்டும் மனோதைரியம் படைத்தவர்களாகவும் இருக்கவேண்டும்.

இறுதியாக, தமிழ்நாட்டில் மணிவிழா எடுக்கப்பட்டுப் பாராட்டப்பெற்ற ஒரு எழுத்தாளரான கி. ராஜநாராயணனின் முன்மாதிரியான செயலை, இங்குகுறிப்பிடவேண்டும். தமிழ் நாட்டில் இந்த மணிவிழா என்பது ஒரு மரபாகஇருந்தாலும் தமக்கு அப்படி ஒரு விழா ஏற்பாட்டை மறுத்த கி. ரா. அவர்கள் பின்னர் பல அன்பர்களின் வற்புறுத்தலுக்கு இணங்கினாலும், தமக்கு ஒரு மணிவிழா மலர் வெளியிடுவதை ஏற்கவில்லை. அதற்குப் பதிலாக தமது பிரதேசம் சார்ந்த புதிய படைப்பாளிகள் இருபது பேரின் 'கரிசல் கதைகள்' என்ற சிறுகதைத் தொகுதியை வெளியிட்டு வைத்தார். எழுத்தாளனாக இருப்பதோடு ஒரு ஏர் பிடிக்கும் விவசாயியாகவும் இருப்பதனால், வளரும் முளைகளைப் பேணும் முன் உதாரண வைபவமாக தனது மணிவிழாவை மாற்றிவிட்டார். தன்னைப்பற்றிப் பேசும் விழாவாக மட்டும் அல்லாமல், புதிய முளைவிடும் வாரிசுகளைப் பற்றிப் பேசும் விழாவாகவும் தமது விழாவை அமையச் செய்துவிட்டார். தமது விழாவில் தம்மை விமர்சித்துப் பேசியதைக்கூட பெருமனதோடு அங்கீகரித்த கி. ரா. "இவை என்னைப் புண்படுத்தாது" என்றும் இறுதி உரையில் குறிப்பிட்டார். இங்கு எழுதியவை யாவும் அது போலவே யாரையும் புண்படுத்தவோ, சீண்டவோ எழுதப்பட்டதல்ல. காலதர்மம் பேணி நிற்க கலைஞரையும், அறிவுஜீவிகளையும் நோக்கி நீளும் அன்புக்குரல் எனவே கொள்ளவேண்டும். செய்வார்களா? □

## யாழ்ப்பாணச் சிறுவர்கள் ஜேர்மனியில் அவஸ்தை

யாழ்ப்பாணத்திலிருந்து ஜேர்மனிக்கு அனுப்பப்படும் சிறுபிள்ளைகளின் நிலையையும் அவர்கள்படும் அவஸ்தையையும் பற்றி ஜேர்மன் பத்திரிகையொன்று வெளியிட்ட தகவல் அதிர்ச்சி தருவதாகவும் வேதனையை ஏற்படுத்துவதாகவும் உள்ளது.

ஒருகிழமைக்கு 30 அல்லது 40 க்கு மேற்பட்ட குழந்தைகள் ஜேர்மனியிலுள்ள பிராங்பேர்ட் விமான நிலையத்தை வந்தடைகிறார்கள். இவர்கள் எந்தவித பாதுகாப்போ ஆள் துணையோ இன்றி அனுப்பப்படுகிறார்கள். இவர்களை மேற்படி பத்திரிகையாளர் மொழிபெயர்ப்பாளரின் உதவியோடு பேட்டி கண்டதில், இவர்கள் சகலரும் ராணுவக் கெடுபிடிக்குப் பயந்தே தாம் வந்ததாகவும், ஜேர்மனியிலுள்ள அவர்களது உறவினரோ, சகோதர சகோதரிகளோ, தாய் தந்தையரோ தம்மை வந்து பொறுப்பேற்றுக் கொள்வார்கள் என்றும் சொல்வதாகக் கூறப்பட்டுள்ளது.

ஆனால் நடைமுறையில் இவர்கள் அங்கு போய்ச் சேர்ந்ததும் யாரும் வந்து உடனேயே பொறுப்பேற்றுக் கொண்டதாயில்லை. அதனால் விமான நிலையத்தின் அலுவலக அறையில் இவர்கள், மிகவும் பரிதாபத்திற்குரிய முறையில் 24 மணித்தியாலத்திற்கு மேலாக உணவின்றி அடைபட்டுக் கிடக்கிறார்கள். இவர்கள் தாம்போய்ச் சேர வேண்டிய இடம்பற்றி விசாரிக்கப்படும்போது தமது கையுள் இறுகப் பொத்தி வைத்திருக்கும் தொலைபேசி இலக்கம் எழுதிய துண்டையே காட்டுகிறார்களாம்! இப்படிக் காட்டியவர்களில் அண்மையில் யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற சுபாஜினி என்ற சிறுமியும் ஒருவராவர். இவரது தாயார் மேலும் இரு சகோதரர்களுடன் ஒரு கிழமைக்குள் புறப்பட்டுவருவதாகக் கூறி இவரை வழியனுப்பிவைத்துள்ளாராம். ஆனால் இப்படியவர்கள் கூறுவது பிள்ளைகளை இங்கு அனுப்பிவைப்பதற்காகவே.

இப்படிவரும் பிள்ளைகள் எல்லாம் கடைசியில் பிள்ளைகளைப் பராமரிக்கும் விடுதிக்கு எடுத்துச் செல்லப்பட்டு, அங்கு இலங்கை சமூக சேவையாளரான டேவிட் வீரசிங்கம் என்பவரின் மேற்பார்வையின் கீழ் விடப்படுகின்றனர்.

அந்த விடுதியில் விடப்படும் பிள்ளைகள் அங்கு தொலைபேசி மணி அடித்ததும் அதை நோக்கி ஓடுகின்றனராம், தம்மோடு யாராவது தொடர்பு கொள்ளலாம் என்ற ஆவலில்.

ஆனால் அநேகமாக ஏமாற்றமே அவர்களுக்குக் கிடைக்கிறதாம். □

## பிரெஞ்சுக் கழகத்தை விரும்புகிறார் 'மரடோனா'

ஆர்ஜன்ரைனாவைச் சேர்ந்த உலகப் புகழ் பெற்ற உதைபந்தாட்ட வீரர் மரடோனா, இத்தாலியிலுள்ள 'நப்பொலி' கழகத்திற்காகத் தற்போது விளையாடி வருகிறார்.

பிரெஞ்ச் சம்பியனான 'மார்செயில்ஸ்' கழகம் தனக்காக விளையாட இப்பொழுது அவருக்கு அழைப்பு விடுத்திருக்கிறது. மரடோனாவும் அக்கழகத்துக்காக விளையாட விரும்புகிறார்.

ஆனால் 'நப்பொலி' கழகம் மரடோனாவை விடுவிக்க மறுக்கிறது. ஏனெனில் ஏற்கனவே செய்யப்பட்டுள்ள ஒப்பந்தப்படி 1993 வரை அவர் இக் கழகத்திற்காக விளையாட வேண்டும்.

நப்பொலி கழகம் தன்னை விடுவிக்கத் தூண்டுவதற்கு எதையும் செய்யத் தயாராயிருப்பதாக, மரடோனா கூறுகிறார்.

# ஸ்ரீதரனின் 'சொர்க்கம்'

இப்பொழுதெல்லாம் நல்ல கதையைப் படிப்பதென்பது அபூர்வமாகவே சித்திக்கிறது. தரமற்ற படைப்புக்களையும் குப்பைகளையுமே முதல்தரமானதாகவும் உன்னதமானதாகவும் காட்டமுயற்சிக்கும் ஒரு சூழலில், படிக்கக்கூடிய மாதிரி சொர்க்கம் குறுநாவல் வாய்த்திருப்பது மகிழ்ச்சி தருவதாயிருக்கிறது.

மிகவும் நுட்பமாகச் சொல்லப்படும் இக்கதை ஆசிரிய கூற்றாகவே அமைந்துள்ளது. இக்கதையில் கதாசிரியரை நாம் காண்பதில்லை. அவர் எப்பொழுதுமே முந்திரிக் கொட்டை மாதிரித் துருத்திக் கொண்டு வந்து எரிச்சலூட்டும் வகையில் எமக்கு உபன்யாசம் செய்வதில்லை. மிகவும் பிரக்ஞை பூர்வமாகச் செய்யப்பட்ட இக்கதையில், சொற்களின் தேர்வு. அவை செய்யப்பட்ட அழகு மட்டுமல்ல கதையின் எளிமை, இயல்பு, நம்பகத்தன்மை ஆகியன அவர் விழையும் மனிதரை நெருக்கத்தில் சென்று புரிந்து கொள்ள உதவுகிறது. இப்பண்புகள் ஒரு நல்ல படைப்பில் சாத்தியப்படுமென்றே நினைக்கின்றேன்.

'மனித சீவியம் எவ்வாறு இருக்க முடியாதென்றும், இருக்கக்கூடாதென்றும் பல மேதாவிகள் நினைத்தும் வற்புறுத்தியும் இருக்கிறார்களோ அது இங்கே, இந்தப் பொந்துகளில் (வாழிடங்கள்) இருக்கிறது. சேற்றில் புரள்கிற நாய்களும், அவற்றுடன் விளையாடித் திரிகிற சிறுவர்களும், சொற்களை வீசி அவற்றின் உரசலில் தங்களை இழக்கிற பெண்களும், நீரிலும் புகையிலும் அமிழ்ந்து போன ஆண்களும், அழுக்கான அழுக்கும்... இது நரகமாகத்தான் இருக்கவேண்டும்'.

கதையில் வரும் இப்பகுதி கதை மாந்தர் வரும் பகைப்புலத்தை எமக்கு மிகத் தெளிவாகக் காட்டுகிறது.

அழுக்கும், ஒழுக்கக்கேடும், அதே சமயம் வாழ்ந்தே தீருவோம் என்ற துடிப்பும் உயிர்ப்பும் உள்ள இந்த மக்களின் ஒரு தவிர்க்கமுடியாத பிறிதொரு entity — 'சொர்க்கம்' (கொட்டாஞ்சேனைக் கள்ளுக் கடை).

இந்தச் சொர்க்கம், கொழும்பில் கரையோரப் பொலிசிற்கும்பொன்னம்பலவாணேசருக்கும் நடுவில் இருக்கிறது. இங்கு தேவர்கள் வந்து — மசால் வடை, இஸ்ஸோவடை, சுண்டல் இத்தியாதி டேஸ்ட் அனுமானங்களுடன் — கூடி அமுது (கள்) பருகி ஆனந்திப்பர்.

திருமணங்கள் மட்டுமல்ல பிறப்புகள் இறப்புகள் கூட இந்த சொர்க்கத்தில் இவர்களால் நிச்சயிக்கப்படுகின்றன.

இந்தச் சூழலில் வாழ்பவர்கள்தான் எசக்கி என்கிற இசக்கிமுத்துவும், செவுத்தி என்றழைக்கப்படும் செவுத்தியானும், இவர்கள் இருவருக்கும் குருஸ்தானத்தில் இருக்கும் கரீமும்.

எசக்கி, செவுத்தி இருவருக்கும் இந்த உலகம் முழுவதுமே கரீமின் காலடியில் இருப்பதாகவே ஒரு நினைப்பு. பல பிரச்சனைகளுக்கு அவனிடம் மட்டுமே தீர்வு உண்டு என்பதாக அவர்கள் நினைத்துக் கொண்டார்கள்.

இம்மூவரும் அடங்கிய புனிதத் திரித்துவத்தைத் தவிர, செவுத்தியின் மனைவி அலிஸ் நோனா, அவர்களின் மகள்களான – ரத்னபாலா, 'விஜிதே' என்கிற விஜிதபாலா, எசக்கியின் மனைவி அன்னம்மா, மகன்மார் பிற்றர், டேவிற், ஹென்றி, விஜிதவின் சின்னச் சிகாகோ பாணி வாழ்க்கைக்கு தலைமைதாங்கும் கெம்பா என்ற அர்னோலிஸ் சில்வா ஆகியோர் துணைப் பாத்திரங்கள்.

இவர்களுடன், இவர்களை ரட்சிக்க வந்த மேய்ப்பனைத் தன்னை வரித்துக் கொண்ட பாதர் தியோப்ளஸும் கதையில் உலாவருகின்றார்கள்.

செவுத்தி, அலிஸ்நோனா ஆகியோரது இளைய மகன் விஜிதவும், அவனது தானைத் தலைவன் கெம்பாவும் முதலாளியொருவனின் உயிருக்கு உலை வைத்ததுடன் ஐயாயிரம் ரூபாய்க்கும் வகை சொல்ல வேண்டி வந்து விடுகிறது. பொலிஸ் கெடுபிடிக்குப் பயந்து விஜித தலைமறைவாகி விடுகிறான். இந்த ஏற்பாடெல்லாம் கெம்பாவின் பொறுப்பில் மிகவும் ஆட்பலத்துடனும் தந்திரம்சார் ஒழுங்கமைப்புடனும் மேற்கொள்ளப்பட்டபோதும், மறைவிடத்திலிருந்து தாயைப் பார்க்கும் ஆவலைக் கட்டுப்படுத்த முடியாமல் விஜித புறப்பட்ட போது, அவன் இறந்த முதலாளியின் கையாட்களால் கத்திக்குத்துக்கு இலக்காகி மரணமாகின்றான். இந்த மையப் புள்ளியைச் சுற்றிய விஸ்தாரமே கதை எனலாம்.

இக்கதையில் வரும் கதா மாந்தர் அனைவருமே பொதுவான குணஇயல்புகளையும் அவரவர்க்கே உரிய தனித் தன்மைகளையும் பொதிந்துள்ளவர்களாக இருக்கிறார்கள்.

பாத்திரங்களின் தன்மைகளை விரிவாக இங்கு பார்ப்பது சிரமம். ஒரு சிலரின் இயல்புகளை மட்டுமே தொட்டுக் காட்டலாம்.

எசக்கி அறுபது வயதைத் தாண்டிய கிறிஸ்தவன். மேய்ப்பன் பாத்திரத்தை ஏற்றுள்ள பாதர் தியோப்பிளஸ் அவன்பால் மிகுந்த பிரியமும் சிரத்தையும் உள்ளவர். அவனைத் திருத்தி எடுப்பதில் விடாமுயற்சி உடையவர். 'மத்தேயுவில் தேவகுமாரன் இந்த விடா முயற்சி பற்றித்தானே சொல்லுகிறார்'. – என்ற நினைப்புடன் அவனை நல்வழிப்படுத்த முயல்கிறார். இம்முயற்சியை எல்லாம் வியர்த்தமாக்கும் வகையில் தான் எசக்கி நடந்து கொள்கிறான். கதையில் வரும் பகுதி இதனை உதாரணப்படுத்துகிறது:

'எசக்கி சாதாரண வாழ்க்கை நியதிகட்கு அப்பால் சிறிதாக ஏதேனும் நடந்தால் பாதரை அணுகி, அவர் சொல்வதைக் கேட்டு, அதன் படியோ அல்லது தன் வசதிக்கேற்றவாறு, தானே அவர் சொல்வதைத் திருத்தி (சில வேளைகளில் தலைகீழாக) நடப்பதே பழக்கம்'.

அத்துடன், அவனுடனேயான ஒரு Stupidityயும் அவனது பாத்திரத்திற்கு வளம் சேர்க்கிறது.

எவ்வளவுதான் கரீமுடனும் எசக்கியுடனும் உறவாடினாலும் செவுத்தி — அவனது குடும்ப வாழ்வைப் பொறுத்த வரை ஒரு outsider — வெளியான்தான்.

கதையில் செவுத்தி பற்றி வரும் பகுதிகள் அவனை இனங்காண உதவுகின்றன:

'செவுத்திக்கும் அவனைச் சுற்றி உள்ள உலகிற்குமான தொடர்பில் ஒரு விரிசலமைந்து போயிருக்கிறது. தன்னந்தனியனாகவே சீவியத்தை வாழ்ந்து கொள்ளக் கற்றுக் கொண்டிருக்கிறான்'.

□ க. சட்டநாதன் □

விஜிதவின் இடர் இவனைப் பாதிப்பதில்லை அவனைப் பற்றிய அக்கறையுமில்லை. அப்படிப்பட்ட இருத்தலே இவனது இயல்பு.

'இன்னொரு மனிதனுக்குள் — தன் மகனை 'இருந்தாலும் — எவ்வளவு தூரம் தன்னை நுழைத்துவிடமுடியும்' — என்பது அவனது வாதம்.

கடவுள் பற்றிய உணர்வுகளும் மதிப்பீடுகளும் அவனைப் பாதிப்பதில்லை. ஒரு சமயம் அமுதபானம் ஆன பின்பு எசக்கியின் விருப்பத்திற்கும் வற்புறுத்தலுக்கும் ஒப்ப கரீமுடன் பாதரிடம் போன இவன், பாதரைப் பார்த்து அகராதியிலுள்ள முழுச் சொற்களின் வீச்சையும் உபயோகித்தபடி, பாதரைத் திட்டினான். இந்நிலையில் 'ஏசுவே! இறந்து, கல்லறைக்குள்ளே முகத்தை மறைத்து நான்கு நாள் சவமாகிக் கிடந்த லாசரசை நீர் உயிர்ப்பிக்கவில்லையா? சவத்துக்கு ஒப்பான செவுத்தி இந்த ஒரு சிறு ஒளியைக் காணும் பாக்கியத்தை நீர் தரமாட்டீரா?' — என்று பிரார்த்திப்பதைத் தவிர பாதரால் எதுவும் செய்ய முடியவில்லை.

பாதர் செவுத்தியைப் பார்த்து— 'செவுத்தி நீ இப்போ போய்ப்படு. கடவுள் உனக்கு நல்வழியைக் காட்டட்டும்', என்கிறார். அதற்கு செவுத்தி— 'உன் கடவுளைக் கூப்பிடு', என்கிறான்.

இதற்கு கரீம் — 'செவுத்தியான் கடவுள் வரமாட்டார். வா நாம் போவம்' என்கிறான். கரீமின் இப்பதில் பாதரை உறையவைத்து விடுகிறது. சாத்தான் வேசம் ஓதுகிறது என்று நினைப்பதைத்தவிர அவரால் வேறு எதுவும் செய்ய முடியவில்லை.

கரீம் காரியவாதி, லௌகீகப் பிடிப்புள்ளவன். எசக்கி, செவுத்தி இருவருக்கும் மலை போலத் துணை நிற்பவன். கடவுள் நம்பிக்கையால் பாதிப்புறுதவன். பாதருடைய கருத்துக்களுக்கு எதிர்மறையான கருத்துக்களையே கொண்டிருப்பவன் அத்துடன், பாதருக்கு என்ன தெரியும் என்ற அபிப்பிராயம் கூட அவனுக்கு உண்டு.

நரகம் பற்றிய அவனது விளக்கம் அவனைப்புரிந்து கொள்ள உதவுகிறது.

'நரகம் எல்லாரும் சொல்வதைப் போல மோசமானதாக இருக்க முடியாது. மிஞ்சி மிஞ்சிப் போனால் நரகத்தில் செத்துக் கொண்டே வாழ்வதோ அல்லது வாழ்ந்து கொண்டே சாவதோ தான் நடக்கும். அதை விட என்ன நடந்துவிடமுடியும்'

இவர்கள் அனைவருமே தனித்த இயல்புகளைக் கொண்டிருந்தபோதும் பொதுவில் மடமை நிறைந்த வாழ்வைச் சுமந்து கொண்டிருப்பதையே மானிட கௌரவம் என நினைப்பவர்களாயும், புற உலக அழுத்தங்கள் எவ்வளவு கசப்பாக இருந்த போதும் எதுவித பாதிப்புக்கும் உட்படாதவர்களாய் அடுத்த நாளைக்காகக் காத்திருப்பது அர்த்தமற்றது, அபத்தமானது எனும் நினைப்புடன் வாழ்வைக் கணங்கள் தோறும் அதன் போக்கிலேயே கண்டு ரசிப்புடன் சுவைப்பவர்களாகவும் இருக்கிறார்கள்.

இப்பண்புகள் ஓர் 'இருத்தலியல்'சாயலை இந்நாவலுக்குத் தந்துவிடுகிறது.

இவர்களுடைய வாழ்க்கை முறைக்கு மாறுபாடான குண இயல்புடையவர்தான் தேவகுமாரனை விசுவாசிக்கும், மனித நேயம் பூண்ட பாதர் தியோப்பிளஸ். இவர்களது வாழ்வு முறை அவரை ஆட்டம் காண வைத்து விடுகிறது. அவர் பூரணமாக நம்பியவற்றிற்குத் தீம்பாகவும் எதிரிடையாகவும் இவர்கள் நடந்து கொள்வது அவருக்குப் பல சந்தர்ப்பங்களில்அதிர்ச்சியையே தருகிறது. இவர்கள் வாழ்க்கையைப் புரிந்து கொண்டவகைக்கும், வாழ்வு பற்றிய அவரது கருதுகோள்களுக்குமிடையே யான ஒவ்வாமையை அல்லது முரணை அவர் வலுவாக உணர்ந்து கொண்டதென்னவோ அவர் திருச்சபையால் செமினரியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட செய்தி கேட்டபோது தான். அவர் தேர்வு பெற்றமைக்கான காரணத்தை சபையின் செயலாளரும் நண்பருமான பாதர் பிரான்சிஸ் கூறுவார்:

'போதனைகளை நடைமுறை வாழ்வில் பிரயோகிப்பது எப்படி என்று மிகவும் தெரிந்தவரைத்தான் நியமித்திருப்பதாக பிஷப்பாண்டவர் எல்லாருக்கும் கூறினார்.'

உன் கடவுளைக் காட்டு என்பவனிடமும் கடவுள் வரமாட்டார் என்பவனிடமும் தனது போதனைகளை எவ்வாறு எடுத்துச் செல்வது என்ற ஓர் இக்கட்டான நிலை அவரை அலமந்து பரிதவிக்கவைக்கிறது. அப்பரிதவிப்பை அவரது வாசகங்கள் உணர்த்துகின்றன:

'வேதாகமத்தில் தங்கள் இதயத்தின் கசப்பிலும் வறுமையிலும் உழன்று மண்ணோடு மண்ணாய்ப் போகப் போகிறவர்களைப் பற்றிச் சொல்லப்படவில்லையா?'

கதையின் இறுதிப்பகுதியில் சொர்க்கத்தின் அருகாமையில் பாதர் வந்து கொண்டிருக்கிறார் அப்பொழுது ஈசல் பூச்சிகளின் இயக்கத்தைப் போன்றதொரு இயக்கத்திலும் சத்தத்திலும் அவருக்கு எசக்கியின் புலம்பல் நன்றாகக் கேட்கிறது.

பாதர் விறைத்து உறைந்து போகிறார்.

'என் பிதா எனக்குத் தந்த கோப்பையில் அல்லவோ நான் பருக வேண்டும்.'

அவரவற்கு அளந்ததுதான் வாழ்வு, அதை யாரால் மாற்றமுடியும் எனும் மனோபாவத்துடன் பாதரால் மீளவும் அடி எடுத்து வைக்க முடிகிறது.

இக்கதையில் வருபவர்களுக்கு இடையிலான உறவு நிலை பிறகாரணிகளால் பேதப்படுவதில்லை. மொழி, இன, மத உணர்வுகளை மீறிய ஒரு வாழ்வின் தரிசனத்தை கதை காட்டி நிற்பது மனதுக்கு இதமாயிருக்கிறது.

கதை கொழும்பு நகர அடிநிலை மக்களின் வாழ்வைச் சித்திரிக்கும் அதே வேளை, கால தேச வர்த்தமானங்களைக் கடந்ததாயும், எந்த ஒரு நாட்டினதும் நகரம் சார்ந்த சேரிப்புற வாழ்வுடன் (Slum life) பொருந்தியதாயும் உள்ளது.

தேர்ந்தவாசகனை நிறையவே திருப்திப்படுத்தும் இக்கதை. கதை எழுதுவதாகப் 'பம்மாத்துப்' பண்ணுவோரும் படித்துப் பார்க்கவேண்டிய ஒன்றென நான் நினைக்கின்றேன். □

## கலைச்சாரல்

## விளையாட்டு

அழப்பிக் குழப்பி
முதலிலிருந்துதொடங்குவோம்
அழப்பி அழப்பியே
விளையாட்டின் விதிகளைக்
குழப்பி விட்டோம்,
வெற்றி எங்களுக்குக்
கிடைக்கும் வரை
குழப்பிக் குழப்பியே
விளையாடுவோம்.

— நெடுந்தீவு மகேஸ் □

## அலைவு

துயரம முட்டிய
பூத வயிற்றுடன்
மறுபடியும் அங்கு
அலைந்தது காற்று.

புழுதியில் தோய்ந்த
மனிதரின் வாழ்வுக்காய்
பனைகளில் மோதியும்
தென்னைகளில் உரசியும்
வயல் வெளிகளில் புரண்டும்
அலைந்தது கரற்று.

சாதியின் சுவர்களை
மோதிச் சரித்தது.

பனைகள் நிமிர்ந்தன.
வயல் வெளிகளில்
புதிதாய் உழவும் தொழிலும் நடந்தன.
வாழ்வுடன் ஒத்திசைந்தன
காற்றும் பொழுதும்.

மீண்டும் துன்பியல்
முள்ளு நெமபி முளைத்தது.
வாழ்வின் அமைதியில்
நகம் பிறாண்டிச் சதையெடுத்து
சூழலில் எறிந்தது.

பெண்மையின் பொருள்சிதைத்து
கண்மணியில் முள்குத்தி
குருதியின் ருசியினை
கொப்பளித்த
கோரத்தின் நிகழ்வுச்சிலை ஏறியது.

துயர் முட்டிய
பூதவயிற்றுடன்
அலைந்தது காற்று.

எனினும்;
தளிர்ப்பின் ரகஷ்யம்
அடிவேர்கள் அறியும்.
காற்றும் பொழுதும்
வாழவுடன் ஒத்திசைக்கும்.

— எஸ். கருணாகரன் □

## ஓர் ஈர நாள்....

வானம் வயிறூதித் தூங்கும்.
கூன் கிழவி நாலுகாலில் நடந்து வீதியைக் கடப்பாள்.
மழை,
மொட்டைத் தலைகள் உடையும் கொட்டைப் பாக்குகள் விழும்
மழை
மரங்கள் பூக்களை உதிர்த்தும் வாசலில்.

ஒரு மின்னல் சரிபிழை பார்த்துவிட்டுப் போகும்.
கடலின் மூலைக்குள் இருந்து
யாரோ வானத்தைப் பிளக்கின்ற சத்தம்
இடி.
நேற்றுப் பொரித்த குருவியின் குஞ்சொன்று
அதிர்ச்சியில் மரிக்க
துக்கத்தால் தாய்ப்பறவை வாய்விட்டுக் கத்தும்.

நான்
கப்பல் விட்ட நாட்களை நினைத்திருப்பேன்.
நாய் நனைந்து என்முன்னால் ஓடும்
அதன் இடுப்புப் புறத்தில் இருந்த சாம்பல்
கரைந்து ஒழுக.
பைத்தியம்,
இந்த நேரத்தில் கற்பனையில் இருக்கின்ற
படுபேயன் என்றெண்ணி
காற்று இலைகுழையைப் பிய்த்து வீசும் என் முகத்தில்,
உம்மா ஜன்னலைச் சாத்திவிட்டுப் போக.

இவை மழைநாளின் சம்பவங்கள்.
பிறகு வாசலைக் கோழி கிழைக்கின்ற தின மொன்றின்
புதினங்கள்.
வானம் சிறுபிள்ளை மாதிரிச் சிணுங்கும்.
கொண்டுவா அந்தக் கிலுக்கியையும் சூப்பியையும்
அழுகையை நிறுத்தென்று கொடுக்க.

— சோலைக்கிளி □

# 'தூண்டிலில்' சிக்கிய 'மல்லிகை!' வெள்ளிவிழா மலர் சிந்தனைக்கு

டொமினிக் ஜீவாவின் மல்லிகை இதழ்பற்றிச் சிறிது சொல்ல வேண்டும் என்ற நிர்ப்பந்தம் நமக்கு ஏற்பட்டுள்ளது.

அன்னார் தன்னைப் பற்றியும் தன்னால் வெளியிடப்படும் மல்லிகை பற்றியும் அதிக கற்பனைப் பாங்காக — அதாவது தன்னை ஒரு புராண காலத்து பகீரதன் போலவும் தன்னால் வெளியிடப்படும் 'மல்லிகை' அப்புராண காலத்துப் பகீரதன் வானின்று மிகப் பகீரதப் பிரயத்தனத்தின் மூலம் கீழிறக்கிய கங்கையைப் போலவும் கற்பனை பண்ணி, டொன் குவிக்சோ (Don Quixotic—கோமாளி வீரர்) பாணியில் முன்வைக்கும் 'கருத்து'க்கள் பற்றி நமக்கு எந்தவித காழ்ப்போ கவலையோ கிடையாது.

இது அவரது சொந்த விஷயம். ஆசையுள்ள மனிதன் தனது ஆசையை எவ்வளவு தூரமும் நீட்டிக் கொள்ளலாம். ஆனால் இது எங்கே பிழைக்கிறது என்றால், இந்த இவரது ஆசை, இவரோடு இணக்கம் காணாத ஏனைய மனிதரை அவமரியாதை செய்வதாக, நிந்தனை செய்வதாக நீட்டிக் கொண்டு நிற்கும் போதுதான். இந்த இடத்தில் இந்த ஆசை கத்தரிக்கப்பட வேண்டிய ஒன்றே. அக்கத்தரியாகவே இச்சிறு விமர்சனம்.

ஜூன் மல்லிகை இதழ் தூண்டில் பகுதியில் இடம்பெற்றுள்ள ஒரு வாசகரது கேள்வியும் அதற்கு ஜீவா அளித்துள்ள பதிலும் இந்த வகையில் நமது கவனத்துக்கும் ஆய்வுக்கும் உரியதாகின்றன.

கல்முனையைச் சேர்ந்த பாறூக் என்பவர் பின்வருமாறு ஒரு கேள்வியைக் கேட்டுள்ளார்.

"மல்லிகையில் களம் தேடிப் பின்னர் சற்றுப் பேசப்படும் சில எழுத்தாளர்கள் மல்லிகைக்கு விசுவாசம் இல்லாமல் இருக்கின்றனரே, இது பற்றி அறிந்திருக்கிறீர்களா ?"

இக்கேள்விக்கு ஆசிரியர் பின்வருமாறு பதில் தருகிறார்:

"இலக்கிய உலகத்தின் ஒவ்வொரு அசைவுகளையும் மிக அவதானமாகக் கவனித்து வைத்திருப்பவன் நான். களம் தேடிகள் ஆத்ம பரிசுத்தமற்றவர்கள். இடம் கிடைத்தால் போதும் என்ற ஆவலாதி படைத்தவர்கள். மல்லிகை வெறும் எழுத்தும் கடதாசியும் கொண்ட பொருளல்ல. அது ஜீவனும் சதையும் உயிர்ப்பும் உள்ளது. இந்த இளந் தலைமுறையின் பெயர் மல்லிகையில் இடம் பெறாமல் விட்டுப் போனால் இவர்களது நாமமே ஈழத்து இலக்கியப் பரப்பில் மறக்கப்பட்டு விடும் என்பது உறுதி. (அழுத்தம் எம்முடையவை) காத்திருந்து பாருங்கள் - நான் சொல்வது உண்மையா இல்லையா என்பதைத் தெரிந்து கொள்வீர்கள்."

இளம் எழுத்தாளன் ஒருவனின் எழுத்துக்கள் இவருடைய மல்லிகையில் இடம் பெறாது போய்விட்டால் அவனது நாமமே இலக்கியப் பரப்பில் மறக்கப்பட்டு விடுமாம்! இது ஓர் அபூர்வ ஆய்வு!

□ வி. எம். பி. □

இவரது மல்லிகையில் எழுதாவிட்டால் ஓர் இளம் எழுத்தாளன் எழுத்தாளனாக முடியாதாமே! எந்த ஆதாரத்தைக் கொண்டு இவர் இப்படிக் கூறுகிறார்? 'மல்லிகையில் எழுதும் இளம் எழுத்தாளர் மட்டுமே இனிமேல் எழுத்தாளராகத் திகழ முடியும். ஏனையோரெல்லாம் இலக்கியப் பரப்பில் மறக்கடிக்கப் பட்டு விடுவர்' என்று எந்த மத்தியஸ்தர் குழு அமர்வில் தீர்மானிக்கப்பட்டு, இவரது மல்லிகைக்கு இந்தத் தனியுரிமை (Patent right) வழங்கப்பட்டது? ஜீவா நமக்கு அறியத் தருவாரா? இவரது இந்த விவாதம் எந்தவகையில் சேர்த்தி? இதை நாம் இவரது பிதற்றல்களில் ஒன்றாகக் கொள்வதா? அல்லது 'ஜீவமொழி'களில் ஒன்றாகக் கணிப்பதா?

இன்றுள்ள ஈழத்து இளம் எழுத்தாளர்களுள் சிறப்பான இடத்தைப் பிடித்துள்ள உமா வரதராஜன், ரஞ்சகுமார் போன்றோரது ஒரு சிறு எழுத்துப் பருக்கைகூட, மல்லிகையில் பட்டுத் தெறித்ததில்லையே! உமா வரதராஜன், ரஞ்சகுமார் போன்றோரது "நாமங்கள்" (மல்லிகையில் எழுதாததால்) இனி இலக்கிய உலகில் மறக்கப்பட்டுவிடுமோ?

அடுத்ததாக, ஓர் இளம் எழுத்தாளன் களம்தேடி வேறு பத்திரிகைகளுக்கு எழுதக்கூடாதென்பது இவரின் இன்னோர் வாதம். இவர் முன்னர் சரஸ்வதி, தாமரை என்று களம்தேடி எழுதியதும்; பின்னர் முதலாளித்துவ ஏரிக்கரைப் பத்திரிகை என்று இவர்களால் சிலாகிக்கப்பட்ட தினகரனில் தன் எழுத்துக்களை அச்சுவாகனமேற்றிக் கண்டு மகிழ்ந்ததும் எதன் விளைவோ? களம்தேடும் ஆவலாதியில் இது நேர்ந்ததில்லையோ? இது மட்டுமல்ல இந்தியஜனரஞ்சகச் சஞ்சிகைகளால் நமது ஆரோக்கியமான கலை இலக்கிய முயற்சிகள் பாழாகின்றன என்று முன்பு அவைக்கெதிராகப் 'போர்க்கோலம்' கொண்ட இவர், தனது 'அனுபவ முத்திரைகளை'க் குமுதத்தில் பிரசுரிக்க அனுமதி கொடுத்து, அதற்காகக் காசு வாங்கியது எந்த ஆவலாதியைச் சார்ந்ததோ?

இத்தகைய பிதற்றல்கள் ஏன் ஏற்படுகிறது? இதன் காரணம் என்ன?

ஒரு அறிவுள்ள மனிதன் தனது திறமைகள் பற்றியும் தனக்குள்ள போதாத்தன்மைகள் பற்றியும், தெளிவும் ஒரு வரைவும் கொண்டவனாக இருக்கவேண்டும். அப்பொழுதே அவன் தனக்குக் கொடுக்கப்பட்ட காலத்தையும் தான் இயங்க வழங்கப்பட்ட சாதனத்தையும, தனக்குரிய அளவு நல்ல முறையிலும் சிறிதளவேனுமசமூகததிறகுப் பயன்தரும் வதத்திலும் பயன்படுததலாம். மாறாக, தன்னைப்பற்றி இத்தகைய வரைவின்றி, அநீத வெற்றுத்தனங்களால் தன்னை விங்க வைத்துக்கொண்டு, ஒருவன் இயங்கத்தொடங்குவானானால் அவனே அச்சமூகத்தால் மறக்கடிக்கப்படுகிறான். அல்லது அச்சமூகத்தால் ஒரு கோமாளியாக எண்ணப்படுகிறான்.

மல்லிகைக்கு நேசக்கரம் நீட்டும் வர்த்தகர்களின் கலியாணங்களுக்கும் காலச்சேபங்களுக்கும் ஈழத்து எழுத்தாளரின் ஏகபிரதிநிதியாகத் தன்னைத் தானே நியமித்துக் கொண்டு இந்தியாவுக்கு "இலக்கியத்தூது" போகும் ஆவலாதியில், இவை பற்றிச் சிந்திக்க இவருக்கு நேரமில்லாது இருக்கலாம். ஆனால் என்ன செய்வது, இவர் இந்த ரீதியில் சிநதித்தே ஆகவேண்டும்! இல்லையேல் இவரும் சரி இவரது மல்லிகையும் சரி, என்னதான் 'காலத்தை மீறி அடுத்த நூற்றாண்டில்' இயங்கியும் அது பெரிய அளவு சாதனை புரியாத இயக்கமாகவே முடிவடையலாம்.

வெள்ளிவிழா மலருக்கு ஆலோசனை கேட்டு இவர் வேறெங்கும் திரியத் தேவையில்லை. இந்த ஆலோசனைகளை உள்வாங்குவாரானால் ஓரளவு வெள்ளிவிழா மலர் சமுதாயத்துக்கு உதவுவதாக வெளிவரலாம்! □

□ "அறிஞன் யார்? பெருந்தன்மையும், பெருநோக்கும், குறைகூறாப் பண்பும், குறுகிய எண்ணமில்லாமையும் கொண்டு உண்மைஎனும் பெருவழியில் அயராது நடைபோடுபவன்தான்"

— ஈஸ்லர்

□ "அறிவைப் பெறுவதற்கு எவ்வளவு அரிய பெரிய முயற்சி தேவையோ — அதைப்போல் தான் அறியாமையை மறைத்திடுதற்கும் அரிய முயற்சி தேவை"

— மோட்ஸிகே

□ "யார் தன்னை உயர்ந்த மேதை என்றும், அறிவாளி என்றும் கூறிக்கொள்கிறானோ அவனைப்போலொரு அறிவில்லாதவன் இருக்க முடியாது."

— கோல்ட்டன்

திசையின் சிறுகதை

# வேலிகள்

எஸ். கே. விக்கினேஸ்வரன்

ஒரு சிகரட் பத்தினல் நல்லாயிருக்கும் போல இருந்தது.

ஆரேனுங் கண்டாலும் என்ற மெல்லிய பயம் மனதிலே தோன்றத்தான் செய்தது அங்குமிங்கும் பார்த்துவிட்டு பொக்கற்றிலிருந்து ஐம்பது சதத்தை எடுத்த – எனக்குப் பயமில்லை என்கிறது மாதிரி டக்கென்று மேசையில் வைத்து — ஒரு பிறிஸ்டல் என்ருன். இவன் கேட்டது விளங்காமல் போகவே, புருவங்களை உயர்த்தி காசைக் கையில் எடுத்தபடி என்ன

என்று கடைக்காரன் இவனைக் கேட்டபோது இவனும் கொஞ்சம் பயம அதிகரித்தது போல ., ... சிகரட்டை மூட்டுவதற்காக மூலை விளக்கில் குனிந்து, சிகரட் பெட்டியின் வெட்டப்பட்ட இலங்களில் ஒன்றை எடுத்துப் பற்ற வைக்கும்போது, கையிலிருந்த இலம் மெதுவாக நடுங்குவது இவனுக்கே வேடிக்கையாக... "ச்சீ ஏன் பயப்பிடோணும்.... ? ஆரும் கண்டா லெனக்கென்ன ......?" என்ற உணர்வு சட்டென்று தோன்றினலும், அதுவே ஒரு உறுதியற்ற உணர்வாக ...... இவன் சிகரட்டைப் பெருவிரலுக்கும் ஆட்காட்டி விரலுக்கும் இடையில் பில்டரில் பிடித்தபடி உள்ளங்கைக்குள் மறைத்துக் கொண்டு "சில்ட்றன் பாக்" பக்கமாக நடந்தான் ......

தூரத்தே தொடுவானின் கோட்டிற்குக் கீழே, அதன் அடியிலிருந்து மௌனமாக ஆரம்பித்துத தவழ்ந்து வந்து அலறி கொண்டு கரையிலொதுங்கும் அலைகளை இவன் அர்த்தமற்று வெறித்தபடி மதிலோரமாக மறைந்து நின்று சிகரட்டை இழுத்து நெஞ்சில் நிரபபி ஊதினன்

ஆனலும். நெஞ்சில் முற்ருக இவனுடைய நீங்கிவிடாது படத்தின ரேகைகள் ........ "ம்... அம்பாலைறயிலையெண்டா எவ்வளவு சுதந்திரமாகச் "சிகரட் பத்தலாம்..." ? இஞ்சை வநது ஒரு சிகரட பத்த இவ்வளவு இப்படி ஒழிய வேண்டியிருக்கு ... " எனறு இவன் நினைத்துச் சலித்துக் கொண்டான். அங்கையெண்டால ஐஞ்சுமணி போலை ஹொஸ்டலாலை வெளிககிட்டு நடந்து டவுஸ்ராண்ட் மட்டும் வந்து எலிபெனற் ஹவுஸிலை சோடா வுட குடிச்சிட்டு ஒரு சிகரட்டும் மூட்டிக் கொண்டு முஸ்பாத்தி விடலாம் ... எங்கடை தமிழ்ப் பெடியள் விளங்காமல ஒரு மாதிரிச் சிங்களச் சவம் பாக்கேக்கை எவ்வளவு சிரிப்புச் சிரிப்பாய் வரும் ... ? கல்யாணி சிரிச்சுச் சிரிச்சுத் நடக்கும் போது, "மெக்கத மொக்கத" என்று சிரிதத படி விளங்காமல் கேட்கும் கென்டீன் கடை முதலாளி, அவன் ஏதேன் தன் கடையிலை இருக்கிற சாமான்களைப் பற்றி விசாரிக்கிறமோ எண்ட நினைப்பிலை. அவனுக்கோ எங்களுக்கோ சரியாகத் தெரியாத "இங்கிலீசிலை" பேசத் தொடங்க ... ஓ ... அவை தான் எவ்வளவு முசுப்பாத்தியான விசயங்கள் ......

...நினைவு ஓட்டத்தில் சட்டென்று ஒரு தடை. பிள்ளையார் கோவில் மணியம் வெட்டுப்பட்ட நினைவு மனதிலே தோன்றி அழுத்தியது. இப்பிடியெல்லாம் நாங்கள் செய்த அநியாயங்களுக்காகத் தான் அவங்கள் அப்பிடிச் செய்திருப்பாங்களோ என்று தோன்றியது.. சீ...... நாங்கள் என்ன செய்தனுங்கள் ... ... சும்மா முசுப்பாத்திக்குத்தானே ... ... ஆனா இது... என்ன மாதிரி ஒவ்வொரு வெள்ளியும் வந்து தேங்காயுடைச்சுப் பக்தியோடை கும்பிட்டிட்டுப் போவாங்கள்... கல்யாணி அப்பவே சொன்னவன் தானே, ...இவங்கள் இப்பிடிக் குப்பிடுறுங்கள் ... சண்டை வந்தாலெல்லே தெரியும்... என்று .. கடைசியாகப் பிள்ளையார் கோவில் தேரைக்கூட...

பஸ்ராண்டிலிருந்து ஹாடி விடுதிக்குப்போக காசுகுடாமல் "ஸ்கொல்" பயணம் செய்வதும் ... ஆமி ஜீப்போ, ட்றக்கோ வந்தால் சொந்த வாகனம்போல் கைகாட்டி மறித்து லிப்ட் வாங்கி, இறங்கும்போது "போமஸ்துதி" சொல்ல அவங்கள் "கமக்நைய் மச்சாங்" என்று சொல்வதைக் கேட்டு ரசிப்பதும்

'ம்... எங்கடை நல்ல காலம் ..... பிரச்சனைக்கு முன்னம் வந்து சேர்ந்திட்டம் வந்த ஆமியளும ரவுன் றவுடியளும் முசல ஹாடிக்குத்தான் போனவங்களாம் ... அடிக்க வெண்டு ... போஸ்ரொப்பீசிலை வேலைசெய்து பிரச்சினைக்கை தப்பிவந்த சிவா அண்ணை சொன்னர், எவ்வளவு முசுப்பாத்தியா சிரிச்சுச் சிரிச்சு றக்கிலே ஏற்றின இந்த ஆமியள் தானே முன்னுக்கு நிண்டு அடிச்சவங்களாம......

எங்கடை பியசேனவும் சோமசிறியாக்களும்அடிச்சிருப்பாங்களோ ? எனனண்டு தெரியும் ? கூடபபடிக்கிறவங்களை அடியாங்கள் ஆனல ஆரும் அடிகக வந்தால பேசாமல் இருப்பாங்கள். இல்லாட்டி அவங்களுக்கும் கரைச்சல தானே ஆனல் அந்த அனுராசபுரததுத் தருமசேனவாச் சனை எப்பிடி நம்பிறது ? அவனதானே அப்பவே எங்கடை "டோம்" கதவிலை "தமிழீழம்" எண்டு எழுதினவனை, லைபிறறி எரிச்சதை சுவாரசியமாகக் கேட்டவனல்லோ அவன் ஏன்ரா அதை எரிச்சியள் எண்டு... அவனிட்டைத் தானே "கௌதகொட்டியா?" புத்தகமும் கிடந்தது. ... ம்... கலியாணி சொல்லிற மாதிரி இவங்கள் 77இலை நல்லா அடிச்சிருப்பங்கள்.

தொடுவானின் அடியில் இருந்து, கரும்புள்ளியாக ஏதோ ஒன்று தோன்றுவதும் மறைவதுமாக வேடிக்கை காட்டிக் கொண்டிருந்தது. தூரத்தே ஹாபர் கட்டுவதற்கான வேலைகள் துரிதமாக நடப்பது... கல்லேற்றிக் கொண்டு போக்ளிப்புகள் போவது எல்லாம் மங்கலாகத் தெரிந்தது பக்டரித் தூசின் பரந்த வியாபிப்பினூடாக ஆட்கள் நடமாடுவதுகூட சாதுவாகத் தெரிந்தது. வடமேற்கு மூலையின் கீழிருந்து... நாலைந்து ஏதோ பெயர் தெரியாத பறவைகள் போர் விமானங்களாக நீந்தின.

இவன் எரிந்து முடிந்துவிட்ட சிகரட்டை வீசிவிட்டு "நான் சிகரட் பத்த வரவில்லை... சும்மா கடலைப் பார்க்கவெல்லோ வந்தனுன்" தோரணையில் இன்னும் நன்ருகச் சுவரில் சாய்ந்து கொண்டே சுவரை வெறித்துக் கொண்டிருந்தான். நேரம் ஐந்துக்கு மேலாகி விட்டது சில்றன் பாக் றேடியோவிலிருந்து இவனுக்குப் பிடிக்காத பாடல் ஒன்று அலறலாக ஒலித்துக் கொண்டிருந்தது. மங்கும் பொழுதின் ஜாலங்கள் தொடுவானிற்கு மேலாக மெதுவாகத் தெரிய ஆரம்பித்தன.

இவன் பொலிஸ்ரேஷன் பக்கமாகத் திருப்பிப் பார்த்தான் ......

பொலிஸ்ரேஷன் குவாட்டஸ் கிணற்றடியில் இரண்டு பொலிஸ்காரர்கள் குளித்துக் கொண்டிருந்தார்கள்...... இவனுக்குத் தான் படித்த கால நினைவுகள் மனதில் எழுந்தன ...அப்பெல்லாம் சந்தி மூலைக் கடையள்ள பீ.டி. சாமி போலையாக்களின்ரை யர்மக் கதைப் புத்தகங்கள் எழுவத்தைஞ்சு சதத்துக்கு அழகான படங்களுடன் தொங்கும். கீழே இருக்கும் கண்ணாடித் தட்டிலே எம்ஜியார் சிவாஜி ஆக்களின்ரை படங்களை சின்னச் சின்னப் போட்டோக்களாக வைத்திருப்பார்கள். பள்ளிக்கூடம் விட்டவுடன் இவன் சந்திக்கு வந்துவிடுவான். இல்லாவிட்டால் இந்த நடேஸ்வராக் கிறவுட்டையெல்லாம் ஏற்றிக்கொண்டு வரும் பஸ். அமெரிக்கன் மிஷனுக்கு முன்னல் நிற்காது. நேரத்துக்கு வீட்டிற்குப் போகேலாது அப்பெல்லாம், இந்தப் போட்டோக்களைப் பார்த்து இது எம்ஜியார், இது சிவாஜி என்று நண்பர்களுடன் இவன் பெறபிடிப்பான் அந்தக் கடைக்கு இங்காலுள்ள தந்திப் போஸ்ட்டடியில் ஒரு பீடா வெத்திலைக்காரன் இருப்பான் வட்டமாகச் சுற்றி நின்று கொண்டு அவனது கொச்சைப் பாட்டுகளையெல்லாம் கேட்பதில் தான் எவ்வளவு சந்தோஷம்...?

இப்போது இன்னும் இரண்டு பொலிஸ்காரர்கள் குளிக்க வந்துகொண்டிருந் தார்கள். முதல் வந்தவர்கள் இன்னும் குளித்து முடியவில்லை. வந்து கொண்டிருந்தவர்களில் துவாயைக் கழுத்தில் மாலையாகப் போட்டிருந்தவன் சோப் பெட்டியைக் குலுக்கியபடி ஏதோ சொல்லிச் சிரிக்க, இவர்களில் சவர்க்காரம்போட்டுக் கொண்டிருந்தவன் வெடிச் சிரிப்பாய்ச் சிரிப்பது மெல்லியதாய்க் கேட்டது ..

முன்பெல்லாம் இந்த பாங்கிடக்கிறதுக்குப் பக்கத்திலை தான் பஸ்ஹோல்ட் கீரிமலைக்குப் போறுக்கள் அதிலை நிண்டு தான் ஏறிறது. இப்பெல்லோ பஸ்ராண்ட் வந்திட்டுது... ஹோல்ட்டிலை பெட்டையள் நிற்கிற நேரமாப் பார்த்து இந்தப் பொலிஸ்காரங்கள் குளிக்க வருவாங்கள். அசிங்கமாகச் சோப்புப் போட்டு பல்லையும் காட்டுவாங்கள். 'எங்களுக்கு முந்திப் படிப்பிச்ச மாலினி மிஸ் இந்த அரியண்டத்துக்காக — இவ பிறகு




நடேஸ்வராவிலை படிப்பிக்கேக்கை—ராஜநாயகித் தியேட்டரடியிலை நிண்டு ஏறி 769 இலைதான் கீரிமலைக்குப் போறவ......'

கடற்கரை ஓரமாகப் பொலிஸ்ரேஷனுக்குப்பின்னல் வளர்ந்திருந்த தென்னைகளுக்குக் கீழ் இரண்டு பொலிஸ்காரர்கள் சப்பாத்துடன் நடந்து வந்தார்கள். வெறும் பெனியனும் காற்சட்டையுமாக நடந்து வந்து கடற்கரையைப பார்த்தபடி தென்னைகளில் சாய்ந்தபடி நின்று கொண்டு பேசத்தொடங்கினர்கள்...... போன கிழமை முழுவதும் இந்தத் தென்னை மரங்களுக்குக் கீழ் ஆமிக்காறர் பொலிஸ்காறருக்கு 'சூட்டிங்" பழக்கினவங்களாம்...... ஒரே வெடிச்சத்தம் என்று அப்பு சொன்ன ஞாபகம்வந்தது......

இவன் நின்ற பக்கமாகப் பார்த்தபடி நின்ற பொலிஸ்காரன் பேசும்போது வாயைக் கோணிக் கோணிக் கதைப்பதையும் கையை அசைத்து அசைத்து சைகை காட்டிப் பேசுவதையும் அவர்கள் பேசுவது கேட்காததால் ஒரு ரசனையுணர்வுடன் இவன் கவனித்தான்......

நேரம் ஐந்தரையாகி விட்டது. றேடியோவில் 'நீங்கள் கேட்டவை' ஆரம்பமாகி விட்டது. மூன்று நாலு சிறுவர்கள் 'சறுக்கீஸ்' விளையாடும் போது போட்ட சத்தம் அதைமீறி இனிமையாக ஒலித்தது...... "இனி நிண்டால் கரைச்சல்... அப்பு ஆறு மணி வேலை முடிஞ்சு வந்தாலும்..."

இவன் பஸ் ஸ்ராண்ட் பக்கமாக வந்தான். இவனும் ஒரு சிகரட் பத்தினல் நல்லாயிருக்கும் போலத்தான் இருந்தது... "ஏ இனி நிண்டால் கரைச்சல் ...போவம்..." என்றுயோசித்தபடி, நின்ற மினி பஸ்சுகளுக்கருகில் போய் விசாரித்தான். எல்லாமே 769 றூட் பஸ்கள். ஒன்றுகூட 764 இல்லை. ம்.. இனி எத்தனை மணிக்கு வரப் போகுதோ ? என்ற நினைப்புடன் மங்கிப் போய்விட்ட அந்த மாலைப் பொழுதின் ஒளியில் கீரிமலைப் பக்கமாக ஏதாவது வருகிறதா என்று நோட்டம் விட்டான்.

தூசுப் படலங்களினூடாக ... ஏதோ ஒன்று... ஓ மினி பஸ் தான் வருகிறது. இவன் மினிபஸ் நிற்பாட்டுமிடத்தில் தயாராக நின்ருன்.

பஸ் வந்து திரும்பி நின்றது. எல்லோருடனும் சேர்ந்து இவனும் ஓடினன்... "எல்லோரும் இறங்குங்கோ... இவ்வளவுந்தான் காங்கேசன் துறை மட்டுந்தான்" ... .. நாலைந்து பேர் இறங்கினர்கள். சிலர் முணுமுணுத்துக் கொண்டு போனர்கள். இன்னும் சிலர் இறங்கவில்லை.

"போகேல்லையெண்டால் பிறகென்ன... இறங்குங்கோவன்......?"

இறங்காமல் இருந்தவர்களில் இரண்டொருத்தர் இறங்கினர்கள்.

இவன் வேறு ஒரு 'பஸ் வராதா என்று பார்த்தான். "ம் சி.ரி.பி வஸ்செண்டாலும் வருந்தானே"

கொஞ்சநேரம் 'பஸ்சுக்குள் ஏதோ கசமுசாக்கள். கொண்டக்டரும் றைவரும் இறங்கி நின்று ஏதோ கதைத்தார்கள். அடிக்கடி அவர்கள் வாயில் கெட்ட வார்த்தைகள் வந்து போனது மட்டும் இவனுக்குக் கேட்டது.

கொஞ்சநேரம் நின்று சலித்துப்போய், "அந்த வஸ்ராண்டுத் திண்ணையில் போயிருப்பம்" என்று திண்ணைப்பக்கமாக இவன் நடக்க நினைத்த போது கொண்டக்டர் பெடியன் கத்தினன்.

(11ஆம் பக்கம் பார்க்க)

தேசியஇனப் பிரச்சினைக் கதை — 8

# அங்கிங் கெனாதபடி

ஏகாந்தன்

பிரெஞ்சுப் புரட்சி நடந்து சென்ற மாதத்துடன் இருநூறாண்டுகள் முடிவடைகின்றன. இருநூறு ஆண்டுகள் என்பது வரலாற்றைப் பொறுத்தவரையில் ஒரு மணித்துளிதான். இருந்தபோதும், பிரெஞ்சுப் புரட்சியும், அது எழுப்பிய அதிர்வலைகளும், இந்த இருநூறு ஆண்டுகளில் பிரான்சும் குறிப்பாகப் பாரீஸும் அடைந்துள்ள மாற்றங்கள் அரசியல், கலைகள், இலக்கியம் என்ற பலதுறைகளிலும் பன்முகப்பட்டவை.

1789ஆம் வருடத்து ஜூலை மாதத்தின் பதினான்காம் திகதி பஸ்ரில் சிறைச்சாலையை பிரெஞ்சு மக்கள் தாக்கிக் கைப்பற்றியமையே பிரெஞ்சுப் புரட்சியின் தோற்றத்தைக் குறியிட்டுக்காட்டியது. நான்கு நூற்றூண்டுகளாக பஸ்ரில், மன்னர்களது கோட்டையாகவும், மன்னர்களும் உயர் பிரபுக்களும் தம்மிஷ்டப்படி, தமக்கெதிரானவர்களை காலவரையறையின்றி அடைத்துவைக்கும் சிறைச்சாலையாகவும் இருந்தது. இருநூறூண்டுகளுக்கு முன்பு தகர்க்கப்பட்ட பஸ்ரில் முடியாட்சியின் குறியீடாகவும் பொதுமக்களுக்கு அச்சம்தரும் ஒன்றுகவும் அமைந்திருந்தது.

இந்த இடத்தின் மேல்
வானம் எவ்வளவு
நேசமாய் இருக்கிறது!
தெளிவாக
இல்லாவிட்டாலும்
ஆண்டாண்டு காலமாகச்
சிறைக்கம்பிகளூடாய்த்
தெரிகிறது
சிறு சிறு 'புதையல்'களாக
வானம்

என்று கவி தாந்தே கபிரியேல், பஸ்ரிலைப் பற்றிப் பொருத்தமாகத்தான் பாடியிருக்கிறுன்.

இன்று, பஸ்ரில் சிறைச்சாலை என எஞ்சியிருப்பது PLACE DE LA BASTILLE சதுக்கத்தின் மேற்குப்புறத்தில் வரிசை வரிசையாக கொஞ்சக் கற்களும் இக் கற்கள் அடையாளம் காட்டும் பழைய பஸ்ரிலின் நில அமைப்பும்தான். மற்றப்படி இன்று பஸ்ரில் இருந்த இடத்திற்கு எந்த அடிச்சுவடுமில்லை. வாகனங்களும், மனிதர்களும் மூச்சைப் பிடித்தபடி ஓடிக்கொண்டிருக்கும் மிகப் பெரிய தெருக்கள், குறுக்கும் மறுக்குமாகஓடுகின்றன. கஃபேக்களும், சினிமாக்களுமாக அமளிப்படுகிறது சதுக்கத்தின் தெற்குப்புறம். நிலத்துக்கடியில் ஓடுகிறது 'மெட்ரோ' எனும் நிலக்கீழ் ரயில்.

பரீஸ் நகரின் 'உத்தியோகப் பற்றற்ற' சின்னமான ஈஃபில் கோபுரத்தைப் பற்றித் தெரியாதவர்கள் மிகக் குறைவு எனலாம். ஆனல் ஈஃபில் கோபுரம் பிரெஞ்சுப் புரட்சியின் நூறூண்டு நினைவைக் கௌரவிக்குமுகமாக எழுப்பப்பெற்றது என்பதைத் தெரிந்தவர்கள் குறைவு. பிரெஞ்சுப் புரட்சிக்கு இருநூறு வயதாகும் இன்று ஈஃபில் கோபுரத்துக்கு நூறு வயதாகிறது. வடிவமைப்பில் அற்புதம் என்று சொல்லப் பெரிதாக ஒன்றுமில்லாவிட்டாலும் பொறியியலைப் பொறுத்தவரை ஈஃபில் கோபுரம் அசாத்தியமானது தான். 700 வடிவமைப்புக்கள் போட்டிக்குச் சமர்ப்பிக்கப் பட்டதில் குஸ்ராவ் ஈஃபிலின் வடிவமைப்பே தேர்ந்தெடுக்கப்பட்டது. தேர்ந்தெடுக்கப்படாத வடிவமைப்புக்களில் 'கில்லற்றின்' வடிவக் கோபுரம் ஒன்றும் இருந்தது. அதனைத் தெரிவு செய்திருந்தால், ஒருவேளை, பரீஸின் குறியீடாகப் 'பிரெஞ்சுப் புரட்சியே' நேரடியாக இருந்திருக்கும்.

பரீஸில் தங்கி நின்ற நாட்களில் பிரெஞ்சுப் புரட்சி பற்றியும் பரீஸ் கொம்யூன் பற்றியும் நினைவுகள் எழுந்தது இயல்பே. இந்த நிகழ்வுகளின் போது கொல்லப்பட்டவர்களுக்காக ஒரு நினைவுச் சின்னம் அமைக்கப்பட்டிருக்கிறது என்ற தகவலும் தெரிந்திருந்ததால், அதனைப் பார்த்துவிடுவது என்று தீர்மானித்தோம், நானும் நண்பர்களும். பிரெஞ்சு மொழி தெரியாமல் 'அங்கிங் கெனுதபடி எங்கும் திரிவது' பரீஸில் சாத்தியமில்லை. எனக்குத் தெரிந்த ஒரேயொரு பிரெஞ்சு வசனம்: பார்லே வூ அங்லே? (உங்களுக்கு ஆங்கிலம்பேசத் தெரியுமா) என்பது மட்டும் தான். நன்கு பிரெஞ்சு தெரிந்த நண்பர்களின் உதவி இருந்தமையால் பல விஷயங்கள் இலகுவாகப் போயிற்று.

இந்த நினைவுச் சின்னம் மொன்ட்பர்ணஸ் எனுமிடத்திலுள்ள ஒரு கல்லறைப் பிரதேசத்தில் இருக்கிறது என்ற தகவல் நண்பர் கலாமோகனுக்குத் தெரிந்திருந்தது. அந்த இடத்திற்குப் போய்விட்டால் எப்படியாவது கல்லறைகள், நினைவுச்சின்னங்களுக்கு மத்தியில் 'பரீஸ் கொம்யூன்' நினைவுச் சின்னத்தைத் தேடிப்பிடித்து விடலாமென்று நம்பினேம்.

மொன்ட் பர்ணஸ் கொஞ்சம் உயரமான இடம். அதுவும் மொன்ட் பர்ணஸ் கல்லறைகள் இன்னும் உயரமான இடத்தில் அமைந்துள்ளன. Mount Parnassus என்று கிரேக்க மொழிப் புராணங்களில் வழங்கப்படும் ஒரு மலையின் பிரெஞ்சுப் பெயராக மொன்ட் பர்ணஸ் (Mont Parnasse) அமைகிறது. 17ஆம் நூற்றூண்டில் புல் வளர்ந்த ஒரு குன்ருக இவ்விடம் இருந்ததெனவும் இளங் கவிஞர்கள் தங்கள் கவிதைகளை வாசிக்கத் திரளாகக் கூடுவார்கள் என்றும் சொல்லப்படுகிறது. மொன்ட் பர்ணஸின் நீண்ட தெருக்களிலொன்ருன பொவிவாட் டு மொன்ட் பர்ணஸின் இருபுறமும் கடந்த காலங்களில் பல கலைஞர்களும் அரசியலாரும் வாழ்ந்துள்ளனர். குறிப்பாக ரூசோ, மொடிக்ளியானி, மார்க் சாகல் போன்ற ஓவியர்களும்; ரில்கே, அப்போலினேயர் போன்ற கவிஞர்களும்; ஸ்ட்ரா வின்ஸ்கி போன்ற இசை வல்லுநர்களும் முக்கியமானவர்கள். லெனினும், ட்ரொட்ஸ்கியும் கூட இவ்விடத்தில் தான் தங்களுடைய அரசியல் அஞ்ஞாதவாசத்தை மேற்கொண்டிருந்தார்கள்.

மெட்ரோ மொன்ட் பர்ணஸில் இறங்கி மேலே வந்து மொன்ட் பர்ணஸ் கல்லறைப் பிரதேசத்தை இலகுவில் அடையாளம் கண்டாயிற்று. ஆனல் பிரதான வாயிலைக் காண முடியவில்லை. சீனப் பெருஞ்சுவர் மாதிரி ஒரு மதில் நீண்டு கொண்டே போயிற்று. கண்ணில் பட்ட ஒரு சிறு வாயிலூடாக ஏறி உள் நுழைந்தோம். கண்ணுக் கெட்டிய தூரம் வரை கல்லறைக்காடு. சில திசைகளில் இருபுறமும் உயர்ந்த மரங்களின் வரிசை. சிறிதும் பெரிதுமாய் எதிரெதிராய் வகை வகையான சிற்ப வேலைப்பாடுகளுடன் ஆயிரக் கணக்கான கல்லறைகள்; நினைவுச் சின்னங்கள்.

இவற்றுக்கிடையே தாங்கள் தேடிவந்த நினைவுச் சின்னத்தைக் குறிப்பாகத் தேடுவது எவ்வாறு என்பது சிக்கலான பிரச்சினையாக மாறிவிட்டது. ஏற்கனவே மொன்ட் பர்ணஸின் ஏனைய பகுதிகளில் அதிக நேரத்தைச் செலவழித்து விட்டபடியால் நினைவுச் சின்னத்தைத் தேட அதிக நேரம் மிச்சமிருக்கவில்லை. ஏறத்தாழ ஒன்றரை மணி நேரமே எஞ்சியிருந்தது. அதன் பின்னர் நாங்கள் வெளியேறி விட வேண்டும்.

கண்ணில் பட்ட ஓரிருவரை நண்பர்கள் உசாவினர்கள். அவர்களுக்குத் தெரிந்திருக்கவில்லை. தோள்களைக் குலுக்கிக் கொண்டு போய் விட்டார்கள். எங்களுடைய கஷ்ட காலத்துக்கு அன்றைக்கென்று ஆட்களையும் அதிகம் காணவில்லை. அங்குமிங்குமாய் ஓரிரண்டு முதியவர்கள் கைகளில் மலர்க் கொத்துகளுடன் மெல்ல நடந்து சென்ருர்கள். இடையில் வெளிநாட்டைச் சேர்ந்தவர்கள் போலத் தெரிந்த ஒரு இளம் சோடியிடம் உசாவியதிலும் பயனில்லை. அவர்கள் வேறு யாரோ ஒருவரின் கல்லறையைத் தேடிக் கொண்டிருந்தார்கள்.

எப்படியும் அந்தநினைவுச்சின்னம் பெரிதாகத்தான் இருக்கும். பெரிய பாறையொன்றில் செதுக்கப்பட்டது என்றும் தெரியும். எனவே கண்ணில் பட்ட எல்லாப் பெரிய (சில மிக மிகப்பெரிய) நினைவுச் சின்னங்களையும் பார்க்க ஆரம்பித்தோம். புகழ் பெற்ற கவிஞர் போடிலேயர், எழுத்தாளர் மாப்பசான் போன்ற பலருடைய கல்லறைகளையும் தாண்டிச்சென்ருேம்.

ஒரு கல்லறையில், படுக்கையின் மீது அமர்ந்திருக்கும் காதலர்களின் வெண்கலச் சிற்பம் ஒன்று அற்புதமாகப் பொருத்தப்பட்டிருந்தது.

மொன்ட் பர்ணஸில் ஏறியும் இறங்கியும் பல திசைகளில் நீளம் நீளமாக நடந்தும் எங்களுடைய 'இலட்சியம்' நிறைவேறும் வழி தெரியவில்லை. புதைகுழிச் சாலை காவற்காரன் ஒருவன் மேற்குப் புறமாக ஒரு நினைவுச் சின்னத்தைக் காட்டினுன். மிகப் பெரியது. ஆண்களும் பெண்களும் திரளாக நிற்பது போன்ற ஒரு சிற்பம். அதன் முன்னல் சிறிய வெளி; ஆட்கள் நின்று பார்ப்பதற்குரிய இடம். அர்த்தப் பொலிவு மிக்க நினைவுச் சின்னம்தான் எனினும் அதன் கீழ் எழுதப் பட்டிருந்த குறிப்பு வேறு ஏதோ சொல்லியது. எனவே மறுபடியும் தேட ஆரம்பித்தோம்.

ஐந்து மணிக்கு ஐந்து நிமிடம் இருக்கும்போது நேரம் முடிவடைந்துவிட்டது என்பதற்காக காவற்காரர்கள் விசில் ஒலி எழுப்ப ஆரம்பித்துவிட்டார்கள். எல்லா மூலைகளிலிருந்தும் தனியாகவும் இணையாகவும் ஆட்கள் வாசலை நோக்கிச் செல்வது தெரிந்தது. கடைசி முறையாக இன்னெரு காவல்காரரிடம் கேட்டுவிடுவதென முடிவு செய்தோம். மிகுந்த அக்கறையுடன் "அடடா, நீண்ட தூரம் இந்தப் பக்கம் வந்துவிட்டீர்கள்" என்று சொல்லியவர் வேறொரு திசையைச் சுட்டி "அதன் முடிவிலே உள்ள பெரியதொரு சின்னம். அடையாளம் காண்பது சுலபம்" என்ருர். வயிற்றெரிச்சல்: நாங்கள் எந்தப் புறமிருந்து நடக்கத் துவங்கினேமோ அந்தப் பக்கம் இருந்தது நினைவுச் சின்னம். எப்படியும் மறுபடி அங்கு செல்ல அரை மணித்தியாலத்துக்கு மேல் நடக்க வேண்டும். சாத்தியப் படாது இன்று என்பதில் ஏமாற்றத்துடன் வாசலை நோக்கி நடந்தோம்.

# வரலாறும் அதன் சமூகப் பெறுமானமும்

யசோதா பத்மநாதன்

## வரலாறு என்பது என்ன?

சில காலங்களாக பாடசாலைகளிலும் பல்கலைக்கழகங்களிலும் கற்றல், அறிதல், தேறல் என்பவற்றில் ஆர்வம் குறைந்து வருகின்ற பாடநெறிகளுள் சரித்திர பாடமும் ஒன்ருகும். இதற்குப் பல காரணங்கள் இருந்தாலும் 'சரித்திரம் தரித்திரமானது' என்ற மாணவர்கள் மத்தியிலான பொது அபிப்பிராயம் முக்கியமானது. அதனைக் கற்க விரும்புகின்ற மாணவர்களைக் கூட கீழாக நோக்குகின்ற பாங்கு சிலரிடையே காணப்படுகின்றமைக்கும் இந்தப் பாட நெறி மீது போடப்பட்ட பிழையான எண்ணங்கள் காரணமெனலாம். அவ்வாருன எண்ணம் வரலாற்றுப் பாடத்தின் மேல் விழுந்தமைக்குப் பல காரணங்கள் உண்டு. நான் இதனை எழுதுவதன் நோக்கம் அதன் உண்மையான தாற்பரியத்தையும் அதன் இன்றைய கால தேவையையும் நாம் உணர்ந்து கொள்ள வேண்டும் என்பது தான்.

வரலாறு என்பது ஆண்டுகளையும் முக்கியமான தலைவர்களின் பெயர்களையும் பாடமாக்கி ஒப்புவிப்பதல்ல. வரலாறு என்பது மானுடத்தின் கடந்த காலத்தை அறிவது. அதாவது ஒவ்வொரு தனி மனிதனுக்கும் அவன் பிறந்ததற்கு, வளர்ந்ததற்கு, அவனுடைய அனுபவத்திற்கு ஒரு வரலாறு உண்டு. அது போல மனித குலத்திற்கு ஒரு வரலாறு உண்டு. இந்த வரலாறு மனிதன் எவ்வாறு தோன்றினுன் என்பதில் இருந்து இன்றைய நிலையை அடையும் வரை அவன் பெற்றுக் கொண்ட அனுபவத்தின் தொகுப்பெனலாம். இதற்குள் அரசியல், பொருளாதாரம், சமூகம், கலை, கலாசாரம் என்பன யாவும் அடங்கும். இதனுல் வரலாறென்பது தனியே அரசியலைப் பார்ப்பது போன்றதோ அல்லது மொழியைப் படிப்பது போன்றதோ அல்ல. அது அனைத்தையும் படிப்பது. அனைத்தையும் தன்னுள் அடக்கியது. மனிதன் இன்று அடைந்து கொண்ட வெற்றிக்கான அவனது கடந்த கால அனுபவங்களைப் படிப்பது.

இத்தகைய மானுடத்தின் இறந்த காலத்தைக் கற்கிற பாடநெறி வரலாறு என்பது ஒரு புறமிருக்க, அதனை நாம் எவ்வாறு அறிந்து கொள்கிறேம் என்பது அடுத்து முக்கியமானது. பொதுவாக வரலாற்றை வரலாற்றுக் காலம் வரலாற்றுக்கு முற்பட்ட காலமெனப் பிரிக்கலாம். வரலாற்றுக்காலத்தில் எழுத்துகள் கிடைப்பதுபோல் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் எழுத்துக்கள் கிடைப்பதில்லை. எனவே, வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தைப் பற்றி அறிவதற்கு அக்கால மக்களால் பயன்படுத்தப்பட்ட பொருட்களே அதிகம் உதவுகின்றன.

வரலாற்ருசிரியர்கள் இனம், மதம், மொழி, பிரதேசம் என்பவற்றைக் கடந்து வரலாற்றுக் கடமையைச் செய்ய வேண்டும். வரலாற்றைக் கற்போர் வரலாற்றைக் கற்கு முன் வரலாற்ருசிரியனைக் கற்கவேண்டும். அவ்வாறெனில் தான் செழிப்பான ஒரு வரலாற்றை நேராக நாம் காணவும் அதன் வழி சிந்திக்கவும் முடியும். இந்தியாவில் இஸ்லாமியர் ஆட்சி பற்றி இஸ்லாமிய வரலாற்ருசிரியர்கள் ஒருவிதமாகவும், இந்து வரலாற்ருசிரியர்கள் ஒருவிதமாகவும், ஐரோப்பிய வரலாற்ருசிரியர்கள் ஒருவிதமாகவும் கூறிச் செல்கின்றனர். இதனுல் வரலாறு துலங்குவதைவிட மேலும் சிக்கலடைகிறது. எனவே ஒரு வரலாற்ருசிரியன் இனமதமொழி கலாசார வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு நடுவு நிலைமையோடு வரலாறை எழுதிச் செல்ல வேண்டிய அதே வேளை, ஒரு

(11ஆம் பக்கம் பார்க்க)

## மைக் டைஸன்:

# எதிரியைத் தாக்கும் முரட்டுக்காளை


வி. வாகீஸ்வரன்

உலகின் பலமான மனிதர்; முரட்டுச் சுபாவம் படைத்தவர்; சர்ச்சைக்குரிய வீரர்; தான் கலந்துகொண்ட 37 தொடர் போட்டிகளில் இலகுவாக எதிரிகளை மண் கவ்வச் செய்து, பிரபலமான இளம் குத்துச்சண்டை வீரர் மைக் டைஸன். இவர் 23 வயதினிலேயே கோடானுகோடி பணத்தைச் சம்பாதித்து, உலகின் மிகப்பெரிய விளையாட்டுத்துறைப் பணக்காரராகவுள்ளார். அமெரிக்க நீக்ரோ இனத்தவரான டைஸன் இப்போது 99.5 கிலோ கிறும் நிறையை உடையவர். எதிரிகளை, போட்டி ஆரம்பித்த உடனேயே, மின்னல் வேகத்தில், முரட்டுக்காளை போல் வயிற்றுப்புறத்தில் தாக்க ஆரம்பித்துவிடுவாராம்.

யூலை மாதம் 21ஆம் திகதி அட்லாண்டிக் நகரில் கார்ல் வில்லியம்ஸ் என்பவருடன் அவர் மோதினார். 12 ரவுண்டுகளைக் கொண்ட இப்போட்டியில் முதல் ரவுண்டிலேயே 93 ஆவது செக்கனிலேயே — டைஸனின் இடது கைக்குத்து கார்லின் நாடியில் இறங்கியது. ஆரம்பம் முதலேயே அடி வாங்கி, நிலைகுலைந்து போயிருந்தகார்லினை, நடுவர் 'ராண்டி நியூமன்' காப்பாற்றி இருமுறை, "நீர் நலமேயுள்ளீரா?" என்று வினவினார். கண்கள் கறுத்த நிலையில் காணப்பட்ட கார்லின் பதில் வராததால், நடுவர் டைஸனுக்கு வெற்றிக் கொடி காட்டினார். ஆயினும் உலகக் குத்துச்சண்டை வரலாற்றிலே மிக விரைவாக முடிந்த 5ஆவது போட்டியான இப்போட்டி, சர்ச்சையைக் கிளப்பியிருக்கிறது. கார்லின் ஆதரவாளர்கள் நடுவரின் முடிவை எதிர்த்ததுடன் மீண்டும் போட்டி நடைபெற வேண்டும் என்று, வேண்டியுள்ளனர். சென்ற வருடம் இதே அரங்கில் ஸ்பிங்ஸை 91 ஆவது செக்கனில் தரையில் விழுத்தி உலக சாதனையை ஏற்படுத்தினார் மைக். 6அடி 3அங்குல உயரமான அமெரிக்கர் ஸ்பிங்ஸ் உடனான இப்போட்டியே, மிகக் குறுகிய காலப் போட்டி எனக் கருதப்படுகிறது. சென்ற முறை இங்கிலாந்து உயர் வீரர் பிராங் புருனோவை 5ஆவது செக்கனில் அரங்கில் வீழ்த்தினார். ஆயினும் புருனோ கண்களில் இரத்தம் கசிந்தபடி, தலையில் பலமான அடிகளை வாங்கிக் கட்டிக் கொண்டும் 5ஆவது ரவுண்டில் நடுவர் ஆட்டத்தை நிறுத்தி டைஸனுக்கு வெற்றிக்கொடி காட்டும் வரை, நின்று பிடித்தார்.

இவ்வாறு அசாதாரண மனித வலு படைத்த வீரனின் வாழ்வில் சென்ற வருடம் விதி விளையாட ஆரம்பித்தது. தொலைக்காட்சி நடிகை ரொபின் கிவின்ஸ் என்பவரைக் காதலித்துத் திருமணம் செய்தார். 6 மாதத்திலேயே தம்பதியருக்கு இல்லற வாழ்க்கை கசந்தது. டைஸன் ஒரு இராட்சதன்; தன்னுடன் முரட்டுத் தனமாக நடந்து கொள்பவர்; தன்னை அடித்துத் துன்புறுத்துபவர்; அவரது ஒரு கைக்குத்தினால் சுவருடன் தான் தூக்கியெறியப்பட்டு மோதுண்டதாகவும் கூறி விவாகரத்து வழக்கு தொடர்ந்திருக்கிறார் கிவின்ஸ். ஆனால் டைஸனின் கோடானுகோடி சொத்துக்களை அடையவே திட்டமிட்டு அவரைத் திருமணம் செய்ததாகவும், விவாகரத்து மூலம் அவர் டைஸனின் ½ பங்கு சொத்தைப் பெற்றுக்கொள்ள முடியுமெனவும் அவர்மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

அவ்வாறு பலவித இன்னல்களை உள்ளடக்கிய வாழ்க்கைப் பின்னணியை விமர்சிப்பதற்கு உலகப்பத்திரிகைகளுக்கு அலாதிப் பிரியம். அவரைப் பற்றி இல்லாததையும் பொல்லாததையும் எழுதி அவரைச் சீண்டி, அவரின் மனோநிலையைப் பாதிப்புறச் செய்வதன் மூலம் அவரை முறியடிக்கப் பிரயத்தனம் மேற் கொள்ளப்பட்டு வருவதாகவும், அவைமீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. சமீபத்தில்கூட நெருப்பும் அச்சமும் (Fire and Fear) என்ற புத்தகத்தில் ஜோஸ் ரொறஸ் என்பவர், டைஸன் பெண்களை அடித்துத் துன்புறுத்துவதில் மகிழ்ச்சி கொள்பவர் என்று எழுதியதன் மூலம் சர்ச்சையைக் கிளப்பியிருக்கிறார். அதற்கு டைஸனின் பயிற்சியாளர் "டைஸன் ஒரு பெண்ணை அடித்தால் அவள் ஆவியாகி விடுவாள் (vapori-sed)" என்று நகைச்சுவையாகக் கூறியிருக்கிறார். அவருக்கு ஏராளமான பெண்ரசிகைகள் உண்டு. இளம் வயதிலேயே கசப்பான பின்னணியினால் அல்லல்படும் டைஸனை இந்தத் தசாப்தத்தில் முறியடிக்க, எந்த மனித சக்தியினாலும் முடியாது எனக் கருதப்படுகிறது. இவருக்கும் ஏனைய வீரர்களுக்கும் இடையில் பெரும் வெற்றிடம் காணப்படுகிறது. ஒருபோட்டியில் எவ்வளவு விரைவாக அவர் வெற்றி பெறுவார் என்றே, அனைவரும் எதிர்பார்ப்பர்.




இப்போது, சீன அரசு 25 மில்லியன் டொலர் செலவழித்து நொவம்பரில், பீகிங்கில் ஜோர்ஜ் போமன் என்பவருடன் இவரைப் போட்டியிட வைக்க முயற்சி எடுத்து வருகிறது. இப்போட்டி மூலம் சீன அரசுக்கு 100 மில்லியன் வரை வருமானம் கிடைக்குமாம். அதற்கு முன்னோடியாக போமன், பிக்ஸ் என்பவரைத் தோற்கடிக்க வேண்டும். 15 வருடங்கள் சம்பியனான போமன், ஓய்வு பெற்றபின் மீண்டும் வந்துள்ளார். இப்போட்டியே டைஸனுக்கு ஆகக் கூடுதலான பரிசான சுமார் 20 மில்லியன் டொலர் (65 கோடி இலங்கை ரூபா) பணத்தை அள்ளி வழங்கவுள்ளது. அவர் பொது வாழ்க்கையிலும் முரட்டுக்காளை போல் நடந்து கொள்ளும் சுபாவம் உள்ளவர் தான். வீதியில் சென்ற பழைய எதிர்ப் போட்டியாளரின் மூக்கை உடைத்தது, வீடியோ பத்திரிகையாளனின் கமராவைப் பந்தாடியது, முரட்டுத் தனமாகக் காரோடி விபத்துக்குள்ளானது போன்ற அவரின் அவ்வகைச் சாதனைப்பட்டியல்(!) தொடர்கிறது. அவர் தோற்பது என்ற பேச்சுக்கே இடமில்லை. இந்த முரட்டுக் காளையை அடக்கப்போவது யார் என்றே, விளையாட்டு ரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருக்கின்றனர்.

அவரது மன உறுதி தளராமைக்கு அவரது வெற்றிகளே சான்று! □

# மனச்சாட்சியின் கைதி

எஸ். மஹாரசிங்கம்



டிசம்பர் மாதம் 10 ஆம் திகதி வரும் மனித உரிமைகள் தினம் தமிழ் மக்களைப் பொறுத்தவரை முக்கியமானதாகும். காரணம் இலங்கையில் தமிழ் மக்கள் காணமற் போதலும்; அவர்களது அழிவும் தொடர்ந்து ஏற்பட்டுக் கொண்டிருக்கும் இக்காலத்தில் இது முக்கியமான ஒன்றே.

ஆனல் எனக்கு வருத்தத்தை ஏற்படுத்துவது என்ன வெனில் 1973 இல் இருந்து தனியாக தமிழ் மக்களுக்காகப் பாடுபட்ட திரு. கந்தசாமி அவர்கள் மர்மமான முறையில் காணமல் போயிருப்பதே.

திரு. கந்தசாமி அவர்கள் எனக்கு மேலான நண்பர் மாத்திரமல்ல, இலங்கையில் பேரினவாதத்தால் நசுக்கப்பட்ட தமிழ்மக்களுக்காக இங்கிலாந்தில் ஓர் அமைப்பை நிறுவுவதன் மூலம், இனவாதச் சிங்கள அரசுக்கு ஒரு சவாலாக விளங்கிய ஒருவருமாவர்.

1983 இல் இலங்கையில் அவரது உயிருக்கு ஆபத்தான வேளையில் அவர் லண்டனுக்கு வந்தார். அப்படி வந்தவர் தனது சேவையின் ஆற்றலால், அகதிகளாக்கப்பட்ட தமிழ் மக்கள் இங்கிலாந்தில் அடைக்கலம் புகுவதற்கும் வழிவகுத்தார்.

நான் தமிழ் மக்களின் சேவைக்காக உருவாக்கப்பட்ட அமைப்புகளான ஸ்கொட் (SCOT), சி பி எவ் ரி ஆர் (CBFTR) ஆகியவற்றின் ஸ்தாபக உறுப்பினர் என்ற ரீதியில் கந்தசாமியைப் பற்றி நன்கு அறிவேன். அவரைப் போல் ஒப்படைக்கப்பட்ட வேலையைத் திறம்படச் செய்பவர் யாரும் இருக்க முடியாது. 'ஸ்கொட்' அமைப்பு அவரது துரித இயக்கத்துக்கு கைகொடுக்காமல் சாமான்யர்களின் கையில் விழுந்தபோது, அவரது இயக்க வேகத்துக்கு ஈடுகொடுக்கக் கூடிய அமைப்பான சி. பி. எவ். ரி. ஆர் (CBFTR) உருவாக்கப்பட்டது. இதையே அவர் 1978 ஏப்பிரலில் எனக்கு எழுதிய கடிதம் காட்டுவதாய்உள்ளது. இக்கடிதம் அனாதைகளாக்கப்பட்ட தமிழ் மக்களில் அவர் எவ்வளவு அக்கறை கொண்டிருந்தார் என்பதையும் கூடவே காட்டும்.

எந்தவித அரசியல் லாப உள்நோக்கும் அற்று அவர் இயங்கினார். யாரும் அவரது பணிக்குக் கைகொடுக்க முன்வராத நேரத்தில் தனியனாக இயங்கினார்.

ஆனல் அவர் திடீரென லண்டனிலிருந்த தமிழ் மக்களின் பிரபலம் வாய்ந்த தகவல் நிலையத்தை மூடிவிட்டு இலங்கை போக முற்பட்டது, ஒரு அதிசயமே. அவர் இத்தருணத்தில் தனது தாயகத்தில் தமிழ் மக்களுக்காக நேர்மையோடு இயங்குவதற்கு எந்தவித அமைப்பும் இல்லை என்பதை உணரவில்லை. அங்கு குரோதமும் வன்செயலுமே தாண்டவமாடியதை அவர் உணரவில்லை.

அவர் தன் தாயகத்துக்கு அமைதிதேடப் போனார். ஆனல் அமைதி தேடப்போன அவர் வன்முறையின் தணியாத தாகத்தால் விழுங்கப்பட்டார். ஆனல் இது இலங்கைப் பேரினவாத அரசின் ஆக்கிரமிப்பால் நேர்ந்ததல்ல. அவர் தாயகம் சென்ற காலத்தில் அங்கே அந்த ஆக்கிரமிப்பாளர் இருக்கவில்லை.

திரு. கந்தசாமி அவர்கள் தன்னையே அழிக்கும் — தன் அழிவிலேயே உயிர்வாழ நினைக்கும்—தற்கொலைக்குச் சமமான வன்முறையில் நம்பிக்கை வைக்கவில்லை. அவர் ஒரு தியாகி. தமிழ் மக்களுக்காகப் பாடுபட்ட அவரை நான் வணங்குகிறேன்.

நன்றி: நியூ லைஃப்
(9, டிசம்பர் 1988) □

*கொள்கை என்பது வாய்வீச்சல்ல —*
*எழுதிக் காட்டும் எழுத்தோவியமல்ல —*
*எத்தகைய இடர்வரினும் தாங்கிக்கொள்ளும் மனத் துணிவோடு கூடிய சிந்தனையின் இறுதி முடிவு*

— பிரிட்ஜஸ் □

*சிறந்த கொள்கைகளைப் பெற —*
*சிறந்த அறிவும், துரோகமில்லா நெஞ்சும் தேவை!*

— எம்மன்ஸ் □

*மனிதத்தன்மையின் எழுதுகோல், கொள்கை.*
*மனிதத் தன்மை இல்லாதவனுக்குத்தான் அந்த எழுதுகோல் இருக்காது.*

— பர்பிரிட்ஜ் □

# அமைதிப்படையின் எண்ணிக்கை

இலங்கையில் நிலைகொண்டுள்ள இந்திய அமைதிப்படையின் எண்ணிக்கை எவ்வளவு? இதுகாலவரை கொழும்பிலுள்ள இந்திய ஸ்தானிகராலயம் அறிவித்த தொகை 45,000—50,000 இடைப்பட்ட தொகையாகும்.

ஆனால் அண்மையில் பிரபல, இந்திய ராணுவம் சம்பந்தப்பட்ட ஆய்வாளரான ரவி றிக்பியா என்பவர் எகொனொமிக் அன்ட் பொலிரிகல் வீக்லி என்ற பத்திரிகையில் இது பற்றிக் கொடுத்துள்ள தகவல் மிகுந்த வியப்பைத் தருவதாகும். அவரது கணிப்புப்படி இலங்கையில் உள்ள இந்திய ராணுவத்தின் ஆகக் குறைந்த தொகை 95,000 - 1 லட்சத்துக்கும் உட்பட்டதாகும். 1988, நொவம்பரில் இந்தியாவிலிருந்து அனுப்பப்பட்ட 10000 துருப்புகளையும் அவர் இதில் சேர்த்துள்ள அதே நேரத்தில், இலங்கையிலிருந்து வாபஸ் பெறப்பட்ட 6000 துருப்புகளையும் கவனத்திற் கொண்டே கூறியுள்ளார். டெல்லியிலுள்ள ராஜதந்திர வட்டாரங்களின் கூற்றுப்படி இலங்கையிலுள்ள துருப்புகள் தொகை 75,000 ஆகும் என்றும் அவர் அறிவித்துள்ளார்.

# தாய்மாரை இழக்கும் குழந்தைகள்

ஒவ்வொரு வருடமும் 10 லட்சம் பிள்ளைகள் தமது தாய்மாரை இழந்து விடுவதாக அண்மையில் அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் அரைவாசித் தொகையினர் பிரசவத்தின் போது ஏற்படும் காரணங்களால் இறக்க நேரிடுகிறது என்றும் தெரியவருகிறது.

ஆனால் இதில் முக்கியமான விஷயம் என்னவெனில் வளர்முக நாடுகளுக்கும் வளர்ச்சி அடைந்த நாடுகளுக்கும் இவ் விஷயத்தில் மிகுந்த வேற்றுமை இருப்பதே, வளர்ச்சி அடைந்த நாடுகளைவிட வளர்முக நாடுகளில் பிரசவத்தின் போது தாய்மார் மரணிப்பது 40% அதிகமாய் உள்ளது. ஆக வறிய நாடுகளில் இத்தொகை 150% அதிகமாக உள்ளதாகத் தெரியவந்துள்ளது.

# வேலிகள்...

(8ஆம் பக்கத் தொடர்ச்சி)

"ஆ... வாருங்கோ... வசாவிளான் மட்டும் போறுக்கள்" இவன் திரும்பி ஓடிப்போய் ஏறி இருந்தான்.

அந்த பஸ்ஸைவிட்டு இறங்காமல் இருந்தவர்கள் முகத்தில் ஒரு பெருமிதச் சிரிப்பு...

இன்னும் கொண்டக்டரும் றைவரும் இறங்காத அவர்களையாயிருக்க வேண்டும் திட்டிக் கொண்டிருந்தார்கள். அவர்களும் இதைப் பற்றி அக்கறைப்படாதவர்களாக.... சிரித்துக்கொண்டு ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டு...

இவன் பஸ் ஓட்டத்துடன் பழைய நினைவுகளில் ஒன்றிவிட்டான்:

ஹாபர், றெயில்வே ஸ்டேஷன், பழைய போஸ்ட் ஒப்பீஸ் கட்டிடம், கப்பலில் வரும் அரிசி மூடைகள் இறக்கப்படும்போது கொட்டுண்டு ஒதுங்கும் அரிசிகளை வாரி வந்து அரித்து எடுக்கப் பெண்கள் ஒதுங்கியிருக்கும் அந்த றெஸ்ட்ஹவுஸ்முன்சிறுவெளி... றெயில்வே ஷெட்... அமெரிக்கன் மிஷன் முன்னால் பஸ்சிற்கு நிற்பவர்களுக்கு வசதியாகப் போடப்பட்டு இருக்கும் தண்டவாளம்...... முன்பு போலவே இப்போதும் அதிலே இரண்டொரு சிறுவர்கள் இருந்து புளியம் இலை கொறிக்கும் காட்சி... கந்தம்மான் வாச்சர் தாண்டித் தாண்டி தண்ணி அள்ளப்போகும் மடம், ஊறணி வேதக் கோயில்...எல்லாம் இவன் மனதுள் புதிதாக பழைய நினைவுகளைக் கிளறிவிட, அதிலேயே லயித்துப் போயிருந்தான் இவன். பஸ் மயிலிட்டியை நெருங்கிக் கொண்டிருந்தது.

'என்னடாப்பா... பெரிய இளவாய்ப் போச்சு... இவங்களிட்டை என்னண்டு காசை வாங்கிறது' என்ற முணுமுணுப்போடு உள்ளே நுழைந்து இவனிடம் கொண்டக்டர் காசு கேட்டபோது இவனுக்கு ஒன்றும் புரியாதது மட்டுமல்ல, எரிச்சல் கூட எழுந்தது.

இவன் மீண்டும் கண்ணாடியூடாக வெளியே பார்வையை ஓடவிட்டான்...... "சல்லி...... சல்லி......நைன் றுப்பீஸ்... ஆறுபேருக்கும் சல்லி...சல்லி ஹரி... ஹரிய காசி இல்லே... நாளைக்கு......" சட்டென்று இவனுக்கு எதுவோ உறைத்தது போல...... திரும்பிப் பார்த்தான். கொண்டக்டர் அவர்களிடம் காசுவாங்க மல்லாடிக் கொண்டிருந்தான். "ஐயா... ஏன் எங்கடை வயித்திலை அடிக்கிறியள்......நாங்கள் இந்த எரியிற டீசலுக்கு முதலாளிக்கு கணக்குக் காட்ட வேண்டாமோ..." "டீசல்...... டீசல்... எங்களுக்கு C. T. B. யிலை பாஸ் இருக்குத் தெரியுமோ? மற்ற பஸ்காறங்கள் எங்களிட்டை காசு கேட்கிறேல்லை...தெரியுமா?" கொண்டக்டருக்கு அவர்களின்பாஷை விளங்க வில்லை... ஆனாலும் C. T. B. யும் பாஸ் என்ற சொல்லும் விளங்கியிருக்க வேண்டும்......அவன் சொன்னான் "அதுதானே...நீங்கள் C. T. B. பஸ்சில போயிருக்கலாம்தானே......ஏன் இதிலை வந்து எங்களுக்கு கஸ்ரத்தைக் குடுக்கிறியள். கவுண்மேன்ற் பஸ்சிலை தானே பாஸ்..."

"ஏய்... நீ என்ன...உனக்கு வாய்கூடிப் போச்சு...எங்கடை கவுண்மேன்ற் தான் இது...... நாங்க நினைச்சால் என்னவும் செய்வம்...உன்னை பஸ் ஓடாமல் பண்ணவும எங்களுக்கு முடியும்..."

கொண்டக்டர் மௌனமாக நிற்கிறான். அந்த சிவில் யூனிபோம் ஆமிக்காரர்கள் இன்னும் சிரிக்கிறார்கள்...அவனுக்கு சிங்களம்விளங்கவில்லை.

ஆனால்...

இவனுக்குத் தலைவரை ஏதோ திச்சுவாலை பற்றி எரிந்தது போல......ஒரு கர்ணகடூரமான உணர்வு. பஸ் ஜன்னலை இறுகப் பற்றிக் கொண்டே கொண்டக்டரையும் அவர்களையும் பார்த்தான்......

கொண்டக்டர் என்ன நினைத்திருப்பானோ... ஆனால்... மௌனமாகவே அவன் நின்றான்......

"எட இழவே இந்தச் சிங்களம் எனக்கும் விளங்கியிருக்க வேண்டாமே..."

இவன் மனம் எண்ணிக் கொண்டது.

பஸ் பலாலிச் சந்தியால் திரும்பி ஓடியது... மனதிலே ஏதோ பாரமாக — மிகமிக பாரமாக, தாங்கமுடியாததாக...

எட்டிப் பார்த்தான்... ஐயர் வீட்டடி, "அண்ணை இறக்கம்"

இவன் இறங்கி நடந்தான். வேலியருகில் படுத்திருந்த முகத்தார் வீட்டுப் பெட்டை நாய் உறுமிக் கொண்டு எழுந்து வந்தது.

எட்டி ஒரு உதை கொடுத்துவிட்டு அது' வீல் ... வீல் என்று ஓலமிடுவதைக் கவனியாமல் நடந்தான் இவன்.

நன்றி: புதுசு
(மே—1983) □

# வரலாறும...

(9ஆம் பக்கத் தொடர்ச்சி)

வரலாற்றைக் கற்க விரும்பும் ஒருவர் வரலாற்றைக் கற்குமுன் வரலாற்றாசிரியனையும் கற்பதனால் நேரான வரலாற்று நோக்கின் இலக்கினை அடையமுடியும்.

அனேகமாகப் பாடசாலைகளில் வரலாறு கற்பிக்கப்படும்போது நிகழ்ச்சிகளும் ஆண்டுகளுமே மாணவர்களுக்கு புகுத்தப்படுகின்றது.ஆனால் வரலாற்றில் தனி நபர்களின் பங்கு மகத்தானது. உலகவரலாற்றினைப் புரட்டிப் பார்க்கின்றபோது ஐரோப்பாவைக் கலக்கிய நெப்போலியனையும் ரஷ்ய லெனினையும், இந்தியத் தேசத் தந்தை மகாத்மாவையும் நாம் காண்கிறோம். அதே வேளை ஜேர்மனியை ஐக்கியப் படுத்திய பிஸ்மார்க்கையும் யுத்தங்களால் உலகையே யுத்தக் காடாக்கிய முசோலினியையும் ஹிட்லரையும் கூட இந்த வரலாற்றில் தான் நாம் காண்கிறோம். எனவே விரும்பியோ விரும்பாமலோ உலகை மாற்றியமைக்கக் கூடிய சக்தி தனி நபர்களுக்குண்டு என்பது வரவாறு எமக்குணர்த்தும் பாடமாகும். எனவே வரலாற்றில் தனி நபர்களின் பங்குபெரியது; பெரியதாக ஆக்க வல்லது. இவற்றை அல்லது இவர்களை நாம் கற்பதன் மூலம் தனி நபர்களின் ஆளுமைகள் அதனால் அவர்கள் அடைந்து கொண்ட வெற்றிகள் அல்லது தோல்விகள், வெற்றிக்கான காரணங்கள், தோல்விக்கான காரணங்கள் என்பவற்றை நாம் காண முடிகின்றது. இவற்றை கற்பதினால் நாமும் நாளை வரலாற்று நபர்களாக விளங்க முடியும். வரலாற்றைக் கற்பதன் பயனும் அங்கு தான் முழுமைபெறுகின்றதெனலாம்.

நம் வரலாற்றை நாம் நாளை எழுதியாக வேண்டும். எனவே, வரலாற்றைப் படியுங்கள், வரலாற்றாசிரியனைப் படியுங்கள் வரலாற்றில் தனி நபர்களைப் படியுங்கள், அதன் மூலம் உங்கள் ஆளுமைகளை வளர்த்துக் கொள்ளுங்கள். அதனால் நாளை நீங்கள் ஒரு வரலாற்றில் வியந்து பேசப்படும் தனி நபர்களாகலாம்.அல்லது வரலாற்றை எழுதி எதிர்காலத்திற்கு உங்கள் வரலாற்றுக் கடமையைச் செய்தவராகலாம், □

# நிகழ்வுகள்

## 25-7-89 செவ்வாய்

1983 ஜூலை 25இல் வெலிக்கடைச் சிறையில் படுகொலை செய்யப்பட்ட 53 தமிழ் அரசியல் கைதிகளிற்கு அஞ்சலியாக, வட — கிழக்குப் பகுதிகளில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது □ ஈ. பி. ஆர். எல். எவ், ஈ. என். டி. எல். எவ்., ரெலோ ஆகிய அமைப்புகள் இணைந்து 'தமிழர் தேசிய மன்றம்' என்ற அமைப்பை அங்குரார்ப்பணம் செய்தன □ கொழும்பு வீதியில், ஓமான் வங்கிக் காசாளரிடமிருந்த 15 லட்சம் ரூபாவை, மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் கொள்ளையடித்துச் சென்றனர் □ கல்வி அமைச்சர் லொக்கு பண்டார சென்னையில் மு. கருணாநிதியைச் சந்தித்து, இலங்கைப் பிரச்சினை குறித்துப் பேசினார் □ ஜூலை 29 ஆம் திகதிக்குப் பிறகு இலங்கை — இந்தியப் படைகள் மோதும் வாய்ப்புண்டென்பதை, ஜனாதிபதியின் பாதுகாப்பு ஆலோசகர் ஜெனரல் சிறில் ரணதுங்க மறுத்தார் □ வடபகுதிக்கான மின்சாரத்தடை திட்டமிடப்பட்ட சதிவேலையென, மின்சார சபை அதிகாரிகள் கருத்து வெளியிட்டனர் □ கறுப்பு ஜூலையை நினைவுகூருமாறு கோரி, ஈழவர் ஜனநாயக முன்னணி அறிக்கை வெளியிட்டது □ முள்ளிப் பொத்தானையில் கண்ணிவெடியில், 18 ஜவான்கள் பலியாகினர் □

## 26-7-89 புதன்

வடமராட்சிப் பகுதிகளில் இடம்பெற்ற ஷெல் வீச்சு, துப்பாக்கிச் சூட்டிற்கு 12 பொதுமக்கள் பலியாகினர் □ திருநெல்வேலியில் சைக்கிளில் சென்ற தந்தையையும் மகனையும் அமைதிப்படையின் ட்ரக் மோதியதால், தந்தை மரணமானார்; மகன் காயமடைந்தார் □ கிளிநொச்சி ஈ. பி. ஆர். எல். எவ். முகாம் மீது ரொக்கட் தாக்குதல் இடம் பெற்றதில் இருவர் காயமடைந்தனர்; ஸ்ரீலங்காப்படையினரே தாக்கியதாக, முதல்வர் அ. வரதராஜப் பெருமாள் குற்றம் சாட்டினார் □ கொழும்பில் இந்தியன் ஓவசீஸ் வங்கி, ஸ்ரேற் பாங் ஒவ் இந்தியா ஆகிய நிறுவனங்கள் மீது கிரனேட் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. பிலியந்தலையில் 100பேர் வேலை செய்யும் இந்தியருக்குச் சொந்தமான ஹியூப்பைப் கம்பெனி, முற்றுகத் தீக்கிரையாக்கப்பட்டது □ சுதுமலையில், 53 வயதான ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார் □

## 27-7-89 வியாழன்

அமைதிப்படை விலகல் தகராறுக்குத் தீர்வுகாண இலங்கை இரண்டு நிபந்தனைகளை அறிவித்தது. அமைதிப்படைத் தளகர்த்தராக இலங்கை ஜனாதிபதியை அங்கீகரிக்க வேண்டும், வட — கிழக்கு மாகாணத்தில் யுத்த நிறுத்தம் வேண்டும் என்ற அந்நிபந்தனைகளை, அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன செய்தியாளர் மாநாட்டில் வெளியிட்டார் □ அமைதிப்படை வெளியேற வேண்டும் என்று வற்புறுத்தி தெற்கில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன □ நள்ளிரவு முதல், நாடு முழுவதும் ஊரடங்குச்சட்டத்தை அரசு அறிவித்தது □ பருத்தித்துறையில் நேற்றுக் கொல்லப்பட்ட 12பொதுமக்களின் சடலங்கள், ஒரே மயானத்தில் எரிக்கப்பட்டன. பெருந்தொகையான மக்கள் அஞ்சலி செலுத்தினர் □ கைதடியில் அதிகாலையில் தேடுதல் மேற்கொள்ளப்பட்டது □

## 28-7-89 வெள்ளி

அரசின் 29 மணிநேர ஊரடங்கு உத்தரவை மீறி, இந்திய எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் தெற்கில் பரவலாக நடந்தன. பெரும்பாலும் பிக்குகளே ஊர்வலங்களுக்குத் தலைமை தாங்கினர். பாதுகாப்புப் படையினர் சூட்டில் 72 பேர் பலியாகினர் □ நீர்வேலியில் அமைதிப்படை முகாமுக்குச் சமீபமாக கிரனேட் வீசப்பட்டது □ நவிண்டிலில் கிரனேட் வீச்சுச் சம்பவத்தை அடுத்து ஷெல் வீச்சுகள் மேற்கொள்ளப்பட்டன □ பருத்தித்துறையில் இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தி, வடமராட்சியில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது □ உயிருக்கு உத்தரவாதம் கோரி பருத்தித்துறைச் சாலை இ. போ. ச. ஊழியர்கள் இன்றும் வேலைக்குச் செல்ல மறுத்தனர் □

## 29-7-89 சனி

600 அமைதிப்படை ஜவான்கள், திருகோணமலையிலிருந்து கப்பலில் தாயகம் புறப்பட்டனர் □ இலங்கையிலிருந்து சென்ற உயர் மட்டக் குழு, இந்தியக் குழுவுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தது □ நேற்றும் இன்றும் தெற்கில் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களில் 130 பேர் வரை கொல்லப்பட்டனர் □ வல்வெட்டி, உடுப்பிட்டிப் பகுதிகளில் தீவிர தேடுதல் நடைபெற்றது □ மோதல்களில் பொது மக்கள் பாதிக்கப்படாது பார்த்துக் கொள்ள வேண்டுமென, பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிக்கையில் கோரியுள்ளது □

## 30-7-89 ஞாயிறு

புத்தூரில் மாலை இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தைத் தொடர்ந்து, ஷெல்கள் ஏவப்பட்டன, மக்கள். இடம்பெயர்ந்தவண்ணம் இருந்தனர் □ வடமராட்சியில் கலிகை, நெல்லியடி மேற்குப் பகுதி, மண்டான் ஆகிய பகுதிகளில் தாக்குதல் சம்பவங்களை அடுத்து, பதில் தாக்குதல்கள் இடம் பெற்றன □ வட-கிழக்கு மக்களுக்குத் தேவையான அதிகாரங்கள் வழங்கப்பட்ட பின்பே அமைதிப்படை வெளியேறலாமென, 'தமிழர் தேசிய மன்றத்'தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது □ பிலியந்தலையில் இடம்பெற்ற கண்ணிவெடித்தாக்குதலில் 5 இராணுவத்தினரும், சாரதியும் உயிரிழந்தனர் □

## 31-7-89 திங்கள்

புதுடெல்லியில் நடைபெறும் இலங்கை இந்தியப் பேச்சுக்களில் முட்டுக்கட்டை நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது □ கொக்குவில் பொற்பதி வீதியில் கிரனேட் வீச்சுச் சம்பவத்தைத் தொடர்ந்து பதற்றம் நிலவுகிறது □ நுணாவிலில் மோதல் இடம் பெற்றது. சம்பவம் நடந்த இடத்தைச் சுற்றி ஷெல் வீச்சுக்கள் மேற்கொள்ளப்பட்டன □ கிளிநொச்சி கரடிப்போக்குச் சந்தியில் இரு குழுக்களிடையில் நேர்ந்த மோதலில், ஒரு தரப்பைச் சேர்ந்த 4 பேர் இறந்தனர் □

திசை
THISAI

# யாழ். மாவட்ட சுகாதார சேவைகளுக்கு நிதிஒதுக்கீடு

புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு யாழ். மாவட்டத்தில் 1987 ஆம் ஆண்டு அநர்த்தங்களின் போது சுகாதார சேவைகளுக்கு ஏற்பட்ட அழிவுகளை ஈடுசெய்யும் வகையில், அதன் நிவாரணத் திட்டத்தின் கீழ் 1989 ஆம் ஆண்டிற்கென ரூபா 62,268,275 நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. 1988ஆம் ஆண்டு யாழ். மாவட்டத்தில் சுகாதார சேவைப் பகுதியினுல் கட்டடப் புனரமைப்பு வேலைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஆனுல், சில உபகரணங்களும், வாகனுதிகளும் மாத்திரம் வெளிநாட்டுச் சேமநல ஸ்தாபனங்களிடமிருந்து நன்கொடையாகப் பெறப்பட்டன.

இவ்வாண்டில் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் நிதி உதவியும், சுகாதாரச் சேவைப் பகுதியினுல் மேற்கொள்ளப்படவிருக்கும் செயலின் விபரங்களும், செலவினங்களும் வருமாறு: கட்டடங்கள் — ரூபா 50,206,500/=, நீர் விநியோகம் வடிகால் அமைப்பு — ரூபா 801,250/=, மின் விநியோகம் — ரூபா 463 250/=, உபகரணங்கள் — ரூபா 2,289,275/=, இயந்திரங்கள் — ரூபா 5,508, 000/=, வாகனங்கள் — ரூபா 3,000,000/=.

இது இவ்வாறிருக்க புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு கட்டட வேலைகளுக்கென 1990, 1991 ஆம் ஆண்டுகளுக்கு முறையே ரூபா 15, 110,000/=ம், ரூபா 8,500, 000/=ம் ஒதுக்கியுள்ளது.

1987 இராணுவ நடவடிக்கைகளின்போது சுகாதார சேவைகள் பிராந்தியப் பணிப்பாளர் அலுவலகம், பண்ணை மார்பு நோய் சிகிச்சை நிலையமும் எக்ஸ்றே உபகரணமும், வட பிராந்திய மருந்துக் களஞ்சியம் ஆகியனவும் முற்றுகச் சேதமடைந்தன. வட பிராந்திய மருந்துக் களஞ்சியமும், சுகாதார சேவைகள் பிராந்தியப் பணிப்பாளர் அலுவலகமும் கிளிநொச்சிவரை செயற்பட்டு வருகின்றன.

# இசைமுகம்

*''சுதந்திர ஒளியினில் மனங்குளி
அதன்வழி திசையெலாம் துலங்கவே''*

## தக்க சந்தர்ப்பம்

இலங்கை அரசு நெருக்கடியில் ஊசலாடுகிறது.

என்றைக்குமில்லாத சோதனை அதற்கு.

ஒருபுறம் தீர்த்துவைக்கப்படாத தமிழ்பேசும் இனத்தின் பிரச்சனை. அதைக் காரணங்காட்டி இங்கு நிலை கொண்டுள்ள இந்திய ராணுவம், அதை ஆதரித்தும் எதிர்த்தும் தமக்குள் அடிபடும் தமிழ்ப் போராளிகள் குழுக்கள்.

இதேபோல் இங்குள்ள இந்திய ராணுவத்தையும் இந்திய ஆதிக்க விரிவையும் பிரச்சாரமாகக் கொண்டு தன்னை நிலை நாட்டக் ''கலையாட்டம் போடும் ஜே.வி.பி.''

இவையெல்லாவற்றையும் விட மோசமான நிலையை உருவாக்கிக்கொண்டிருப்பது இலங்கையின் பொருளாதாரச் சீர்கேடு. இப்பொருளாதாரச் சீர்கேடு தன்னிச்சையாகத் தொற்றிய நோயல்ல. உடலில் எங்காவது ரணகாயம் ஏற்பட்டால் காய்ச்சல் அடிப்பதுபோல், இன்று நாட்டில் தலைவிரித்தாடும் தீர்க்கப்படாத பிரச்சனைகளே இன்றைய நாட்டின் பொருளாதாரக் காய்ச்சலுக்கான காரணம்.

'இளமையில் ஆடியது வயதுபோனபின் தெரியும்' என்பதுபோல், வலுவுள்ளபோது இலங்கை அரசு மேற்கொண்ட தமிழ் பேசும் இனத்துக்கெதிரான 'முறுக்கேறி'ய நடவடிக்கைகளே இன்று அதை ஊசலாடும் இந்நிலைக்குள் தள்ளியுள்ளது.

தமிழ் மக்களின் உரிமைகளைப் பறித்து, அவர்களை ஒதுக்கி, 'போரா சமாதானமா' என்று கேட்டு வைத்தது யார்? அவர்களைப் போராட வைத்ததும், அவர்களைக் கொன்றொழிப்பதற்காகக் கோடிக்கணக்கான செலவில் இராணுவத்தைக் கட்டியெழுப்பியதும் யார்? ஜே. வி. பிக்கு மன்னிப்பளித்து, அவர்களைச் சுதந்திரமாக உலவ விட்டு 'பெருமனித' தோரணையைப் போட்டுக் கொண்டது யார்? தமிழ் மக்கள் தலைமைகளோடு பேச மறுத்து, இந்தியப்படையை இங்கு தருவித்தது யார்?

இவை எல்லாவற்றையும் செய்தவர் ஏழு மாதங்களுக்கு முன்னர் பதவியிலிருந்து விலகிய 'அதிஉத்தம' ஜனுதிபதி ஜே ஆர். தான். அவரது கருத்துப்படி, இவை எல்லாவற்றையும் அவர் சந்தோஷம் மேலிடவே செய்தாராம். இனவாதம், இன்ப்படுகொலை, இதனுல் ஏற்பட்ட பொருளாதார நாசம் எல்லாம் அவருக்குச் சந்தோஷம் தந்த விஷயங்களாக இருக்கலாம். பதினுன்காம் லூயி மன்னன் மேற்கொண்ட அனுவசியப் போர்களும், ஆடம்பரச் செலவுகளும் பதினுரும் லூயிமன்னன் தலையில் பிரெஞ்சுப் புரட்சியாக வந்து வெடித்தது! முன்னைய 'அதி உத்தமரின்' சந்தோஷ விளையாட்டுகள் இன்றைய ஜனுதிபதியின் தலையில் பூகம்பமாக வெடித்துள்ளது. அவரவர் செய்த பாவம் அவரவர் தலையில்!

ஆனுல் இந்தச் சந்தர்ப்பத்தை நமது தமிழ் பேசும் தலைமைகள் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். யாருக்கெதிராக எடுத்த நடவடிக்கைகளால் இன்று அரசாங்கம் ஊசலாடுகிறதோ, அந்தத் தமிழ் பேசும் சக்திகள், தமக்குள் ஐக்கியப்பட்டு, யாருக்கும் விலை போகாது ஓர் உடன்படிக்கைக்குட்பட்டு, அரசாங்கத்தை ஓர் உலுக்கு உலுக்கினுல் உரிமைகள் தாருகவே வந்துவிழும். இடையில் இதற்காக எவருமே நிற்கும் அவசியம் ஏற்படாது.

## மாகாண அரசுக்கு ஈ. தொ. ச. சம்மேளனம் கடிதம்

வட, கிழக்கு காணி விவசாய புனர்வாழ்வு அமைச்சர் எம். கணேசலிங்கம் அவர்களுக்கு ஈழத் தொழிற்சங்க சம்மேளனம் எழுதியுள்ள கடிதத்தின் சாராம்சமாவது:

எமது நாட்டில் காடுகளை அழிப்பதற்குக் கையாளப்பட்ட வரன்முறையற்ற செயல் காட்டுவளத்தையே நிர்மூலமாக்கியதால் குடிதண்ணீருக்குக் கூட கஷ்டப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. கடந்த பல வருடங்களாக அரிசியில் தன்நிறைவு கண்டுவிட்டதாக ஜம்பம் அடித்த சிறிலங்கா அரசு, தனது தவருன பொருளாதாரக் கொள்கையாலும் இனவாத அரசியலாலும் மக்களை பஞ்சத்திற்கும் பட்டினிக்கும் இரையாக்குகிறது. இது வட கிழக்கு மாகாண அரசையும் பெரிதாகப் பாதிக்கப் போவதால் அதைத் தவிர்ப்பதற்குரிய வழிவகைகளை தங்கள் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன்.

பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு, காணி, விதைநெல், பசளை, கொடுத்து உதவுதல், தூர்ந்துபோன குளங் குட்டைகளை புனரமைத்தல், நிலமற்றவர்களுக்கு நிலம் வழங்குதல், மண்ணுக்கேற்ற பயிர்களை விளைவிக்கச் செய்தல், இஷ்டபூர்வமான கூட்டுறவுப் பண்ணை முறையை உருவாக்குதல் போன்றவை முக்கியமானவையாகும்.

## அமெரிக்காவின் 'புஷ்' விமானங்கள் செனேட் எதிர்ப்பு

அமெரிக்கா சமீபத்தில் ரேடாரில் விழாத புதிய வேவு விமானங்களை கண்டுபிடித்துள்ளது. இந்த விமானங்கள் இதன் எதிர் முகாம்களாகிய நாடுகளின் படைத்தளங்களின் மேலாக இலகுவில் ஊடுருவி வேவு பார்க்கும் திறன் உடையன. இதற்கான உற்பத்திச் செலவு 50 கோடி டொலர்களாகும். இத்தகைய விமானங்கள் 132 ஐத் தயாரிப்பதற்கு அமெரிக்கா திட்டமிட்டிருப்பதை, 'வீணுன பொருள் விரயமென்று அமெரிக்க செனேட் எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறது. இதனுல் இதன் உற்பத்தியை அமெரிக்கா ஒத்திவைத்துள்ளது. அத்துடன் நட்சத்திரப் போர்த் திட்டத்தையும் 2000 ஆவது ஆண்டளவிற்கு ஒத்திவைத்துள்ளது. அடுத்த நூற்றாண்டில் சந்திரனை நிரந்தர தளமாகக்கொண்டு செவ்வாயை நோக்கிப் பயணமாகும் விண்வெளி யாத்திரைத் திட்டத்திற்கும், 2000 ஆவது ஆண்டிற்கு நட்சத்திரப் போர்த் திட்டத்தை ஒத்திவைத்ததற்கும் ஏதோ சம்பந்தமுள்ளது தெளிவாகிறது.

அமெரிக்காவின் இந்த ஒத்திவைப்புகளெல்லாம் உலக சமாதானத்தையே ஒத்திவைப்பதாகும் எனவே உண்மையான சமாதானம் விரும்பிகள் விசனப்படுகின்றனர்.

## உஸ்பெக்கிஸ்தான் கலவரங்கள் இனப்பிரச்சினையல்ல

சோவியத் ரஷ்யாவில் உள்ள உஸ்பெக்கிஸ்தானில் அண்மையில் ஏற்பட்ட கலவரங்களை இனப்பிரச்சினை எனச் சொல்வது தவறு என, உஸ்பெக்கிஸ்தான் பிரதமரான ஹய்ராத் காதா தெரிவித்துள்ளார். சோவியத் பத்திரிகையான பிராவ்தாவிற்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஷியா, ஸுன்னி ஆகிய முஸ்லிம் பிரிவினரிடையே ஏற்பட்ட பூசல்களையே மேற்குலக செய்திஸ்தாபனங்கள், வேறு நோக்கத்துடன் பிழையாகப் பரப்பியுள்ளன என்றும், அவர் அதில் கூறியுள்ளார்.

## ஒரேயொரு ஊரில் ஊரடங்குச் சட்டம்

சென்றமாத இறுதியில் அரசாங்கம் இலங்கை முழுதுக்குமான ஊரடங்குச் சட்டத்தை பிரகடனப் படுத்தியபோதும், அதனுல் பாதிக்கப்படாது இலங்கையின் வட-கிழக்குப் பகுதிகள் வழமைபோல் இயங்கின.

ஆனுல் இதற்குப் புறநடையாக யாழ்ப்பாணத்தின் ஒரு சிறுபகுதி மாத்திரம் ஊரடங்குச் சட்டத்தின் சில கட்டுப்பாடுகளுக்குள்ளாகியது. அந்தச் சிறுபகுதி நயினுதீவாகும்.

நயினுதீவு இலங்கைக் கடற்படையின் கட்டுப்பாட்டின்கீழ் இருப்பதால் இந்த விதி விலக்கு ஏற்பட்டது. அன்று நயினுதீவுக்கு மக்களை ஏற்றிச்செல்லவோ அங்கிருந்து மக்களை வேறு இடங்களுக்குக் கொண்டு செல்லவோ வள்ளங்கள் அனுமதிக்கப்படவில்லை!

## சீனுவுக்கு எதிர்ப்பு

மேற்கு நாடுகளில் உள்ள சீன மாணவரும், அண்மையில் சீனுவில் ஒடுக்கப்பட்ட மாணவரின் ஜனநாயகப் புரட்சியின்போது மேற்குக்குத் தப்பியோடிய மாணவ தலைவர்களும் சேர்ந்து, ஒடுக்கப்பட்ட சீன மாணவர் புரட்சியின் 100 ஆவது தினத்தை நினைவு கூரும் முகமாக, எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் சர்வதேச ரீதியிலான எதிர்ப்பொன்றை வெளிக்காட்டத் திட்டமிட்டுள்ளனர்.

கடந்தமாதம் பிரான்சில் இடம்பெற்ற பிரெஞ்சுப் புரட்சியின் 200 ஆவது ஆண்டு வைபவத்தின் போது சீன மாணவர் கலந்து கொண்டதும், சீனுவுக்கு இத்தகைய ஒரு எதிர்ப்பை வெளிக்காட்டும் முகமாகவே என்பது வெளிப்படை.

ஆனுல் இதில் சீனமாணவர் கலந்து கொள்ள அனுமதித்தமைக்காக சீன அரசு பிரான்சைக் கண்டித்துள்ளது. சீனுவின் இச்செயல் வேடிக்கைக்கும் முரண்பாட்டுக்கும் உரிய ஒன்ருக அரசியல் அவதானிகளால் கருதப்படுகிறது.

## பேச்சுவார்த்தை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையை ஒரு லெபனுன் ஆக்கலாம்.

அரசாங்கம் தற்போதுள்ள நிலையில், செயலற்றுப் போகும் பட்சத்தில், நிரந்தர இராணுவ ஆட்சியை நீடிக்கலாம். இதுவும் ஒரு நான்காவது சக்தியாக மேலெழும் போது நிலைமை மிகுந்த சீரழிவையே நாட்டில் ஏற்படுத்தும். இது இந்தியாவுக்கும் அதிக சாதகமான நிலையை ஏற்படுத்தாது என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆகவே பேச்சுவார்த்தையை மேற்கொள்ளும் இருதரப்பினரும் பொதுநன்மையை முன்வைத்து இணக்கம் பெறுவதே தீர்க்கதரிசனமான செயலாய் இருக்கும் என அவதானிகள் கருதுகின்றனர். □

இப்பத்திரிகை, இல. 118, 4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்திலுள்ள நியூசரா பப்ளிகேஷன்ஸ் நிறுவனத்தால் 4-8-1989இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது
Registered as a newspaper at the General Post Office, Sri Lanka, Under Q. J. 78/89.